# பள்ளிக் கல்வித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2021-2022

## மானியக் கோரிக்கை எண் 43


அன்பில் மகேஸ் பொய்யாமொழி

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

# பள்ளிக் கல்வித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021-22

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | தொடக்கக் கல்வி , இடைநிலை மற்றும் மேல்நிலைக்கல்வி | 4 |
| 3 | மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 44 |
| 4 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 50 |
| 5 | அரசுத் தேர்வுகள் இயக்ககம் | 73 |
| 6 | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 90 |
| 7 | பொது நூலகங்கள் | 97 |
| 8 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 118 |
| 9 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 122 |
| 10 | நிதி ஒதுக்கீடு | 133 |

## 1. முன்னுரை

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை".

குறள் 400

**கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும் அதற்கு ஒப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை**

**–கலைஞர் உரை**

எதிர்காலக் குடிமக்களுக்குத் தரமான கல்வியை அளிப்பதற்கு, தமிழ்நாடு அரசு மிகுந்த முக்கியத்துவம் வழங்குகிறது. இன்றைய குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்திற்குக் கல்வியே வாயிலாகும். மேலும், பள்ளிக் கல்வியின் தொடக்க ஆண்டுகளே மாணவர்களின் எதிர்கால நலனுக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன. மாநிலத்தின் முதன்மையான குறிக்கோள் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான எளிதில் கிடைக்கவல்ல உள்ளடக்கிய கல்வியை வழங்குவதே ஆகும். இந்த அடிப்படையில் தான் தமிழ்நாடு அரசு 2021-22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.32,599.54 கோடியை ஒதுக்கியுள்ளது.

பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில் அரசு பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில்

சேர்த்தல், அவ்வாறு சேர்க்கப்பட்ட குழந்தைகளை இடைநிற்றல் ஏதுமின்றி இடைநிலைக் கல்வி வரை முழுமையாக பள்ளிக் கல்வியைத் தொடரச் செய்தல். குழந்தைகளின் வயதுக்கேற்ற கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்கு சிறந்த பயனுள்ள பயிற்சிகளை அளித்து அவர்களின் கற்பித்தல் திறனை வலுப்படுத்துதல், கற்றல் கற்பித்தலின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படை எழுத்தறிவையும், எண் திறன்களையும் கற்பித்தல், பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், குழந்தைகளுக்கு புதுயுகத் திறன்களை ஊட்டுதல் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு நலன் ஆகியவற்றை கோவிட் போன்ற இயல்பல்லாத சூழ்நிலைகளில் உறுதிப்படுத்துதல் ஆகியவை பள்ளிக்கல்வியைப் பொறுத்தமட்டில் அரசின் கவனத்திற்குரிய முக்கியமானவையாக அமைகின்றன. அராசங்கத்தின் மேலே குறிப்பிட்ட பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும் பொறுப்புகளை பள்ளிக்கல்வித் துறையின் கீழ் அமைந்துள்ள பல்வேறு இயக்ககங்கள் மேற்கொண்டு வருகின்றன. தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக்கல்வி இயக்ககம், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, முறைசாரா மற்றும்

வயதுவந்தோர் கல்வி இயக்ககம் ஆகியவை பள்ளிக்கல்வித் துறையின் கீழ் அமைந்துள்ள இயக்ககங்கள் ஆகும். மேலும், இத்துறை மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), அரசுத்தேர்வு இயக்ககம், பொது நூலக இயக்ககம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகிய அமைப்புகளின் உதவியோடு இயங்கி வருகிறது.

## 2. தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

### 2.1. முன்னுரை

தனிமனிதனின் ஒவ்வொரு சாதனைகளுக்கும் பள்ளிக் கல்வியே அடித்தளமாக விளங்குவதால், மாணாக்கரின் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றுகிறது. பள்ளிகளில் தரமான கல்வி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஒவ்வொரு மாணாக்கருக்கும் தரமான கல்வியை வழங்கி முழுமையான வளர்ச்சியை அளிப்பதே அரசின் தொலை நோக்குப் பார்வையாகும். மாணவர்களுக்குப் பாட அறிவோடு வாழ்வியல் திறன்களையும் அளித்து அன்றாட வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் தகுதி உள்ளவர்களாக உருவாக்குவதில் நமது கல்வி அமைப்பு கவனம் செலுத்துகிறது.

### 2.2. நோக்கங்கள்

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்
- 100 சதவீதம் பள்ளி வசதி ஏற்படுத்துதல்

- உள்ளடக்கிய கல்விச் சூழலை உருவாக்குதல்
- தரமான கல்வியை வழங்குதல், கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்
- கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் மாணவர்களின் அறிவுத் திறனைக் காட்சிப்படுத்தவும் வளப்படுத்தவும் தேவையான வாய்ப்புகளை உருவாக்குதல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துதல்

### 2.3. பள்ளி வசதி

பள்ளி வசதிகளை அனைத்துக் குழந்தைகளுக்கும் எளிதில் கிடைக்கச் செய்வதே அனைவருக்குமான கல்வியின் நோக்கம் ஆகும். புதிதாகத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், ஏற்கெனவே இருக்கும் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், புதிய பள்ளிகள் தொடங்க இயலாத இடங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துதல், குறைந்த மக்கள் தொகை உள்ள பகுதிகளில், உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்குதல் ஆகியவை 100 விழுக்காடு பள்ளி வசதியை ஏற்படுத்துவதில் முக்கியக் காரணிகளாக அமைகின்றன.

*2.3.1. புதிய பள்ளிகள் தொடங்குதல்*

ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகளின்படி புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கவும் தரம் உயர்த்தவும் படுகின்றன. 2020-21ஆம் கல்வியாண்டில் 26 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 10 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 36 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 46 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்தக் கல்வியாண்டில் மலைப்பாங்கான மற்றும் தொலைதூரப் பகுதிகளில் 12 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்படுவதுடன், 22 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட உள்ளன.

*2.3.2. புவியியல் தகவல் முறைமை*

பள்ளிக் கல்வித் துறை பொதுப் பயன்பாட்டிற்கென எளிதில் பயன்படுத்தும் வகையில் புவியியல் தகவல் முறைமை இணைய வழியில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் இந்த தகவல் தொகுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தகவல் முறைமையானது, இணைய வழியிலும் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 92,234

குடியிருப்புகளில் 90,009 குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகளும், 91,045 குடியிருப்புகளில் நடுநிலைப் பள்ளிகளும், 90,101 குடியிருப்புகளில் உயர்நிலைப் பள்ளிகளும், 90,308 குடியிருப்புகளில் மேல்நிலைப் பள்ளிகளும் அமைந்துள்ளன.

### *2.3.3. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி*

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகளின்படி பள்ளிகள் தொடங்க இயலாத மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள பகுதிகள் மற்றும் இடவசதி இல்லாத பகுதிகளில் குழந்தைகள் தொடக்க மற்றும் நடுநிலைக் கல்வியைப் பெறுவதற்கு போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. போக்குவரத்து வசதி இல்லாத, சாலை வசதி இல்லாத, தொலை தூர / மலை / வனப் பகுதிகளில் பள்ளி வசதி இல்லாத குடியிருப்பு பகுதிகளைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு எளிதாகச் சென்று வர போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. இவ்வசதி 9 மற்றும் 10ஆம் வகுப்புகளைச் சார்ந்த மாணாக்கருக்கும் 2021-22ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### *2.3.4. உண்டு உறைவிடப் பள்ளிகள்*

பள்ளி வசதியற்ற மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள், தொலை தூர, மலை / வனப் பகுதிகளில் வாழும் குழந்தைகள், வாய்ப்பு மறுக்கப்பட்ட தெருவோரக் குழந்தைகள், பெரியோர் பாதுகாப்பின்றி வாழும் குழந்தைகள் கல்வி வசதி பெறுவதற்கென உண்டு உறைவிடப் பள்ளிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் கீழ் ஒன்பது மாவட்டங்களில் உள்ள 13 உண்டு உறைவிடப் பள்ளிகளில் 1,150 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர்.

### *2.3.5. பெண் குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகள்*

சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் உள்ள 61 கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகளில் 9,410 மாணவிகள் பயில்கின்றனர்.

இப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையுள்ள பெண் குழந்தைகளுக்குத் தரமான கல்வி உண்டு உறைவிட வசதியுடன் வழங்கப்படுகிறது. இதுதவிர, 9 கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை செயல்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூ.200/- மாணவிகளின் வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்படுகிறது. கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகளின் செயல்பாட்டிற்காக 2020-21ஆம் ஆண்டு ரூ. 97.07 இலட்சம் செலவிடப்பட்டு உள்ளது.

*2.3.6. மாணவியர் விடுதி*

தொடக்க மற்றும் நடுநிலைக் கல்வியை நிறைவு செய்த மாணவிகள் தங்கள் கல்வியைத் தொடரும் வகையில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் மாணவியர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு 4,400 மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இச்செயல்பாட்டிற்கென 2021-22ஆம் ஆண்டில் ரூ.1,172.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

### *2.3.7. பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான செயல்பாடுகள்*

100 விழுக்காடு மாணவர் சேர்க்கையை உறுதி செய்வதற்கும், பள்ளிகளில் மாணாக்கரைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கும் இடைநிற்றலை முற்றிலும் தடுப்பதற்கும் பள்ளி செல்லாக் குழந்தைகள், பள்ளியில் சேராத குழந்தைகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், தெருவோரச் சிறார்கள், நகர்ப்புறங்களிலுள்ள வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள், பெரியோர் பாதுகாப்பின்றி வாழும் குழந்தைகளுக்கென சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் வீடு வீடாகக் கணக்கெடுப்புப் பணி நடத்தப்பட்டு, பள்ளி செல்லாக் குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்தம் வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்கப்பட்டுத தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2020-21ஆம் கல்வி ஆண்டில் கண்டறியப்பட்ட 33,591 பள்ளி செல்லாக் குழந்தைகளில் 33,335 பேர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக முறையான பள்ளிக் கல்வியிலிருந்து சில குழந்தைகள் வெளியேறி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனவே, கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை உதவியுடன், இடைநிற்க

வாய்ப்புள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு களப்பணிக் குழுவால் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. இப்பணி 10.08.2021 முதல் 31.08.2021 வரை அனைத்துக் குடியிருப்புகளிலும் வீடு வீடாக கைப்பேசி செயலியின் உதவியிடன் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அடையாளம் காணப்படும் மாணாக்கரின் புவியியல் இடம் உட்பட அனைத்துத் தகவல்களும் செயலி வழியே ஒருங்கே பெறப்படுகின்றன. கணக்கெடுப்பின்போது அடையாளம் காணப்படும் குழந்தைகள் உடனடியாக பள்ளியில் சேர்க்கப்படுவர். இச்செயல்பாடுகளுக்கென 2021-22ஆம் கல்வியாண்டில் ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.3.8. புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி*

2020-21ஆம் கல்வி ஆண்டில் மாநிலத்திற்கு உள்ளும், மாநிலத்திற்கு வெளியிலும் என புலம்பெயர்ந்த 7,541 தொழிலாளர்களின் குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களில் 7,285 பேர் வயதுக்கேற்ற வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். தெலுங்கு, இந்தி, வங்காளம் மற்றும் ஒடியா மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட புலம் பெயர்ந்த 3,361 குழந்தைகளின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய 123 கல்வித் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு

உள்ளனர். இக்குழந்தைகளின் தாய்மொழியிலேயே பாடநூல்களும் வழங்கப்பட்டுள்ளன. இக்குழந்தைகளின் கல்வித் தேவையை திறம்படப் பூர்த்தி செய்ய இந்தக் கல்வி ஆண்டில் ரூ.54.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.4. உள்ளடக்கிய கல்வி**

**கற்றல் குறைபாடுள்ள மாணவர்களும் சிறப்புக் கவனம் தேவைப்படும் மாணவர்களும் பிற மாணாக்கருடன் ஒரே பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலுவதற்கென இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தும் ஒரு அறிவியல்பூர்வமான அணுகுமுறையே உள்ளடக்கிய கல்வியாகும். இக்கல்வி முறையே சகிப்புத்தன்மை கொண்ட சமூகத்தை உருவாக்க வழிவகை செய்யும்.** சுகாதாரத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டில் உள்ளடக்கிய கல்வியின் இலக்கினை அடைவதற்குப் பின்வரும் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:

- **சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆயத்த பயிற்சிகள் வழங்குதல்**

- குழந்தைப் பிறப்பிலிருந்து 18 வயது வரை சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குதல்

- ஒற்றைச் சாளர முறையிலான தரவு மேலாண்மையை நிறுவுதல்

- உதவி உபகரணங்கள் வழங்குதல்

- மாற்றுத் திறனாளிகளுக்குத் தடையில்லா பள்ளிக் கட்டமைப்புகளை உறுதி செய்தல்

- பொருத்தமான கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வசதிகள் மற்றும் சிகிச்சைகள் வழங்குதல்

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒருங்கிணைத்து கற்றல் செயல்பாட்டில் ஈடுபடுத்த ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஆசிரியர்கள் மூலம் உரிய கவனம் செலுத்துதல்

1,57,158 சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவ முகாம்கள், உதவி உபகரணங்கள், உதவித் தொகை, வீட்டுப் படி, பயணப்படி, வழித் துணையர் பயணப்படி போன்றவற்றின் வாயிலாக இவர்கள் பயனடைகின்றனர். கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை வழியே இக்குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு, சரியான நேரத்தில் உரிய பலன்கள் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவிப் பொருட்கள் வழங்க பல்வேறு தலைப்புகளின் கீழ் 2020-21ஆம் கல்வியாண்டில் ரூ.53.16 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### 2.5. தரமான கல்வி

போதுமான பள்ளிகளைத் தொடங்கியதன் விளைவாக அனைவருக்கும் கல்வி என்ற நிலையினை தமிழ்நாடு எய்தியுள்ளது. அண்மையில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக் கல்வி தரக் குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு 2வது இடத்தைப் பெற்று உள்ளது. பள்ளி வசதி ஏற்படுத்துதல், சமத்துவம், உட்கட்டமைப்பு, நிருவாகம் ஆகிய இனங்களில் நமது மாநிலம் சிறப்பாகச் செயல்பட்டு, நாட்டிலேயே சிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. எனினும், கற்றல் அடைவுகளில்

இந்தியாவின் 37 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 23வது இடத்தையே பெற்றுள்ளது. பள்ளிக் கல்வியின் தரத்தை, குறிப்பாக தொடக்கக் கல்வியின் தரத்தை உடனடியாக மேம்படுத்துவதன் அவசியத்தை இந்நிலை உணர்த்துகிறது.

### *2.5.1. எண்ணும் எழுத்தும் இயக்கம்*

அனைவரும் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை அடைவதற்கென எண்ணும் எழுத்தும் இயக்கம் பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் மாநிலம் முழுவதும் படிப்படியாக செயல்படுத்தப்படும். 1-3 வகுப்புகளில் படிக்கும் ஒவ்வொரு குழந்தையும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆசிரியர்களுக்கென தலைமைப் பண்புப் பயிற்சி, ஆசிரியர்களுக்கான கையேடு, மாணாக்கரின் நிலைக்கேற்ற கற்றல் உபகரணங்கள் ஆகியன இவ்வியக்கத்தின் முதன்மைச் செயல்பாடாக அமையும். ஒவ்வொரு குழந்தையின் அடைவுத் திறனும் தனித்தனியே கண்காணிக்கப்படும். இந்நிதியாண்டில் எண்ணும் எழுத்தும் இயக்கத்திற்கென ரூ.66.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### *2.5.2. கற்றல் மேம்பாட்டுக்கான செயல்பாடுகள்*

கற்றல் செயல்பாடுகளில் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்க அனைத்து மாணாக்கருக்கும் இணைப்பு கட்டகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சித் தாள்களுடன் கூடிய பாடவாரியான பயிற்சிப் புத்தகங்களும் 1 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சித் தாளில் இடம்பெற்றுள்ள விரைவு துலங்கல் குறியீடுகள் (QR Code) வாயிலாக மின்னணு சாதனங்களின் உதவியுடன் கூடுதல் பாடப்பொருள்களைக் காணொலிப் படங்களாகப் பார்க்கவும் மதிப்பீட்டு வினாக்களைக் கொண்டு பயிற்சி பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்செயல்பாடுகளுக்கென 2021-22ஆம் ஆண்டில் ரூ.34.78 கோடி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### *2.5.3. கல்விசார் குறியீடுகள்*

கல்விசார் குறியீடுகள் பள்ளிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர் தொடர்பான குறியீடுகளை ஒப்பிடுவதற்கு உதவும் புள்ளி விவரங்கள் ஆகும். பொருத்தமான கல்விசார் குறியீடுகளைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளின் விளைவுகளை மதிப்பிட இயலும். கல்விசார் குறியீடுகள் பள்ளிக் கல்வியின் நிலையையும் இலக்குகளுக்கு ஏற்ப

திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களையும் இனங்காண உதவுகிறது. சில கல்விசார் குறியீடுகளின் வரையறைகள் பின்வருமாறு :

*2.5.3.1. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்*

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் வயதுவரம்பு ஏதுமின்றி சேர்க்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே நிலையில் ஒத்த வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்} = \frac{\text{சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள்}}{\text{மக்கள் தொகையில் ஒத்த வயதுடைய குழந்தைகள்}} \times 100$$

தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் மாணவர் சேர்க்கை மாநிலத்தில் முழுமை நிலையை அடைந்துள்ளது. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் 100க்கு மேலும் உயர்நிலை வகுப்புகளில் 93.85 ஆகவும், மேல்நிலை வகுப்புகளில் 77.80 ஆகவும் உள்ளது.

*2.5.3.2. நிகர மாணவர் சேர்க்கை விகிதம்*

6 முதல் 17 வயதுக்குட்பட்ட 1 முதல் 12ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே வயதிற்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும். தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலையில் நிகர மாணவர் சேர்க்கை விகிதமானது முறையே 99.90, 99.30, 78.44 மற்றும் 65.16 ஆக உள்ளது.

*2.5.3.3. தக்கவைத்தல் விகிதம்*

தக்கவைத்தல் விகிதம் என்பது தற்போது 5, 8, 10ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்கும் முறையே 4, 7, 9 ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாம் வகுப்பில் மாணவர் சேர்க்கை செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். நம் மாநிலத்தில் தக்க வைத்தல் விகிதம் தொடக்க வகுப்புகளில் 99.25 ஆகவும் நடுநிலை வகுப்புகளில் 98.6 ஆகவும், உயர்நிலை வகுப்புகளில் 96.75 ஆகவும் உள்ளது.

*2.5.3.4. இடைநிற்றல் விகிதம்*

மொத்த மாணவர் சேர்க்கைக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும்.

இடைநிற்றல் விகிதம் ஆனது தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை வகுப்புகளில் முறையே 0.75, 1.35 மற்றும் 3.25 ஆக உள்ளது.

*2.5.3.5. மாணவர் ஆசிரியர் விகிதம்*

$$\text{மாணவர் ஆசிரியர் விகிதம்} = \frac{\text{பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை}}$$

புதிய ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவதால் நாட்டிலேயே மிகக் குறைந்த மாணவர் ஆசிரியர் விகிதம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாணவர் ஆசிரியர் விகிதம் தொடக்க நிலையில் 21.80 ஆகவும், நடுநிலையில் 24.45 ஆகவும் உயர்நிலையில் 19 ஆகவும், மேல்நிலையில் 27 ஆகவும் உள்ளது.

*2.5.3.6. பாலின சமநிலைக் குறியீடு*

பாலின சமநிலைக் குறியீடு என்பது பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவிகள் எண்ணிக்கைக்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{பாலின சமநிலைக் குறியீடு} = \frac{\text{மொத்த மாணவிகளின் சேர்க்கை}}{\text{மொத்த மாணவர்களின் சேர்க்கை}}$$

பாலின சமநிலைக் குறியீடு உயர்நிலையில் 1.06 ஆகவும் மேல்நிலையில் 1.10 ஆகவும் உள்ளது.

### *2.5.3.7. பாலின சமத்துவக் குறியீடு*

பள்ளிச் சேர்க்கையில் பாலின சமத்துவத்தினை அறிய பாலின சமத்துவக் குறியீடு பயன்படுகிறது.

$$\text{பாலின சமத்துவக் குறியீடு} = \frac{\text{குறித்த நிலையில் பெண்களில் சேர்க்கை பங்கு}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு}}$$

பாலின சமத்துவக் குறியீடு உயர்நிலையில் 1.03 ஆக உள்ளது.

## ***2.5.4. கல்வி இணைச் செயல்பாடுகள்***

### *2.5.4.1. விளையாட்டு மற்றும் உடல்நலக் கல்வி*

பள்ளி மாணவர்களிடையே விளையாட்டு மனப்பான்மையை வளர்ப்பது முக்கியமானதாகும். மாவட்ட, மாநில, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்ய பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15 இலட்சம் மாணாக்கர் மண்டல அளவிலிருந்து தேசிய அளவு வரையிலான பல்வேறு

விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுகின்றனர். எனவே, பள்ளிகளில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியம் ஆகும்.

### *2.5.4.2. சதுரங்கம்*

உலக அரங்கில் மிகச் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்களை தமிழ்நாடு உருவாக்கி வருகிறது. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை வளர்த்திடவும், பகுத்தறியும் சிந்தனையை வளர்த்திடவும், கடினமான சூழ்நிலைகளைத் திறம்பட எதிர்கொள்ள ஊக்கப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நிலைகளில் சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு அரசால் ரூ.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### *2.5.4.3. நாட்டு நலப்பணித் திட்டம்*

சுகாதார முகாம்கள், இரத்த தான முகாம்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மரம் நடுதல் போன்ற சமூக சேவைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் வாயிலாக ஆளுமைத் திறனை வளர்ப்பதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 97,650 மாணவர்கள் நாட்டு

நலப்பணித் திட்டத் தன்னார்வலர்களாக 1,958 அணிகளில் செயல்பட்டு வருகின்றனர். நாட்டு நலப்பணித் திட்டத்தின் வழக்கமான செயல்பாடுகளுக்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடியும், சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கென ரூ.2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

*2.5.4.4. சாரண சாரணியர் இயக்கம்*

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதாரம், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முதலுதவி, மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் கொண்டு சேர்த்தல் இவ்வியக்கத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைமையகத்தைப் பராமரிப்பதற்காகவும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும் ரூ.7 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிறப்பாக செயல்படும் சாரண சாரணியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் ராஜ்ய புரஷ்கார் விருது வழங்கப்படுகிறது. இதற்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திலிருந்து ரூ.2 கோடி சாரண சாரணியர் இயக்கத்திற்கு வைப்புத் தொகையாக

அரசால் வழங்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள சாரண சாரணியர் இயக்கத்தின் சொத்துக்களைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### 2.5.4.5. இளையோர் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் இளையோர் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் பயிற்சி பெறுகின்றனர். மாணவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தொண்டுள்ளத்துடன் தன்னார்வலர் செயல்பாடுகளைச் செய்திட இத்தி டம் உதவுகிறது. இளையோர் செஞ்சிலுவைச் சங்கத் தன்னார்வலர்களுக்கு முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலைப் பாதுகாப்பு, தீ தடுப்பு பயிற்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளின் போது பொது மக்களுக்கு உதவி செய்தல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 2.5.4.6. இளைஞர் மற்றும் சுற்றுச் சூழல் மன்றம்

இம்மன்றங்கள் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்த செயல்பாடுகளை மாணவர்கள் மேற்கொள்ள

பயிற்சி அளிக்கின்றது. இளைஞர் மற்றும் சுற்றுச் சூழல் மன்றச் செயல்பாட்டிற்கென 2020-21ஆம் கல்வியாண்டில் ரூ.24.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.6. புதிய ஆசிரியர்கள் நியமனம்

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளிப்படையான முறையில் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் வாயிலாக தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமனம் செய்ய பள்ளிக் கல்வித் துறை முன்னுரிமை அளிக்கிறது. ஏற்கெனவே காலியாக உள்ள பணியிடங்களில் பல்வேறு பாடங்களுக்கு 367 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களும் 723 நிலை–1 முதுகலை கணினி பயிற்றுநர்களைளும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பல்வேறு பாடங்களில் 492 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு வாயிலாக 2020-21ஆம் கல்வி ஆண்டில் நிரப்பப்பட்டுள்ளது. மேலும், 2021-22ஆம் கல்வியாண்டில் 2,098 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 635 இளநிலை உதவியாளர்கள், 197 தட்டச்சர்கள் மற்றும் 14 சுருக்கெழுத்து தட்டச்சர்கள்-III 2020-21ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையின் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில்

நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், நேரடி நியமனம் வாயிலாகத் தெரிவான 20 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு ஜூலை-2021இல் பணி நியமனம் வழங்கப்பட்டது. இதுமட்டுமல்லாது, கருணை அடிப்படையில் 250 இளநிலை உதவியாளர்கள் ஜூலை-2021இல், நியமிக்கப்பட்டுள்ளனர்.

**2.7. பள்ளிகளில் மாணாக்கர் பாதுகாப்பு**

மாணாக்கர் பாதுகாப்பு நிறைந்த சூழலில் கல்வி பயிலத் தேவையான அனைத்து வசதிகளையும் உருவாக்க அரசு விழைகிறது. அனைத்துப் பள்ளிகளும் 2020-21ஆம் ஆண்டில் ரூ.15 கோடி மதிப்பில் தூய்மைப்படுத்தப்பட்டு உள்ளது. கொரோனா பெருந்தொற்றிலிருந்து மாணவர்கள் தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்ளுவது, உடல்நலம் மற்றும் சுகாதாரம் பேணுதல், ஊரடங்கு காலத்தில் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய உளவியல் ஆலோசனைகள், மாணாக்கர் பாதுகாப்பில் ஆசிரியர்களின் பங்கும் பொறுப்பும் குறித்த பயிற்சிகள் ரூ.14 கோடி செலவில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு இணைய வழியில் வழங்கப்பட்டுள்ளது.

### *2.7.1. உதவி எண் 14417*

மாணவர்களுக்குக் கல்வி தொடர்பான தகவல்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கும் நோக்குடன் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய கட்டணமில்லா தொலைபேசி சேவை 14417 ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தேவையான விவரங்களை உடனுக்குடன் இச்சேவை வழங்குகிறது. கிராமப்புற மற்றும் மலைவாழ் மாணவர்களுக்கு வழிகாட்டுதல், வளரிளம் பருவ குழந்தைகளுக்கு உளவியல் ஆலோசனை போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 3.5 இலட்சம் தொலைபேசி அழைப்புகள் இச்சேவை வழியே பெறப்பட்டுள்ளன.

### *2.7.2. பாலியல் தொல்லைகளில் இருந்து மாணவர்களைப் பாதுகாத்தல்*

மாணவர்களை பாலியல் தொல்லைகளிலிரு பாதுகாப்பதற்கென அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பைக் கண்காணிக்க ஒவ்வொரு பள்ளியிலும் “மாணவர் பாதுகாப்பு ஆலோசனைக் குழு” அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் இருந்தும் பெற்றோர்களிடம் இருந்தும்

புகார்களைப் பெற கட்டணமில்லாத் தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் வசதியுடன் கூடிய கட்டுப்பாட்டு அறை பள்ளிக் கல்வி இயக்குநரக வளாகத்தில் அமைக்கப்படும்.

அனைத்துத் தரப்பினரிடமும் போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பள்ளிகளில் பாதுகாப்பை மேம்படுத்தவும் கையேடு ஒன்று தயாரித்து வழங்கப்படும். சுய மதிப்பீட்டுக் கட்டகம் ஒன்றும் உருவாக்கப்படும். மாணவர்கள் தங்கள் புகார் மற்றும் கருத்துகளைத் தெரிவிக்க வசதியாகப் பள்ளி வளாகத்தில் பாதுகாப்புப் பெட்டிகள் வைக்கப்படும். ஒவ்வொரு வருடமும் நவம்பர் 15 முதல் 22ஆம் நாள் வரை அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்களை பாலியல் வன்முறைகளில் இருந்து தடுக்கும் வாரம் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.8. உட்கட்டமைப்பு வசதிகள்

பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு என்பது கற்பதற்கு ஏற்ற சூழலை வழங்குவதற்கும், மாணவர் வருகையை அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும் அவசியமாகும். அனைத்துப் பள்ளிகளிலும் போதுமான எண்ணிக்கையில் தூய்மையான கழிப்பறை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

இந்நிலையை அடைய, ஒவ்வொரு ஆண்டும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, நபார்டு, ஊரக வளர்ச்சித் துறை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் வளர்ச்சித் திட்டம், பொதுத்துறை நிறுவனங்கள்/பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி என பல்வேறு நிதிகளின் வாயிலாக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள், நூலகக் கட்டடங்கள், ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், கலை மற்றும் கைத்தொழில் அறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, சூரிய மின்சக்தி வசதிகள், கைப்பிடியுடன் கூடிய சாய்தளங்கள் என ரூ.182.66 கோடி செலவில் 2020-21ஆம் கல்வியாண்டிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடப் பணிகள் நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. 2020-21ஆம் ஆண்டிற்கான, நபார்டு நிதியுதவியின் கீழ் ரூ.106.78 கோடி மதிப்பீட்டில் 2,695 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், 2021-22ஆம் கல்வியாண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மூலம் பின்வரும் பணிகளுக்கு ரூ.34 கோடி மதிப்பீட்டில் நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | தொடக்கக் கல்வி | இடைநிலைக் கல்வி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மாணவர்களுக்கான கழிப்பறை | 115 | 50 | 165 |
| 2 | மாணவியருக்கான கழிப்பறை | 51 | 259 | 310 |
| 3 | சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான கழிப்பறை | 446 | 451 | 897 |

### *2.8.1. உயர் தொழில்நுட்ப ஆய்வகம்*

பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான முக்கிய ஊக்கியாக உலகளவில் தகவல் தொழில்நுட்பம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 3,090 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு இணையதள இணைப்புடன் கூடிய தலா 10 கணிப்பொறிகளும் 2,939 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு இணையதள இணைப்புடன் கூடிய தலா 20 கணிப்பொறிகளும் வழங்கப்பட்டு உள்ளன. இந்த உயர்

தொழில் நுட்ப ஆய்வகங்களின் பயன்பாடு மாநிலக் கட்டுப்பாட்டு அறையின் உதவியுடன் கண்காணிக்கப்படுகிறது.

உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் மாணவர்களுக்கு இணைய வழியில் பாடங்களை நடத்தவும் மதிப்பீடு செய்யவும் ஆசிரியர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. 2021-22ஆம் கல்வி ஆண்டில் 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் ரூ.114 கோடியில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *2.8.2. திறன் வகுப்பறைகள்*

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை எளிதாகவும் ஆர்வமுடையதாகவும் மாற்றியுள்ளது. திறன் வகுப்பறைகள் மாணவர் மைய வகுப்பறைச் சூழலை உருவாக்கும். இவ்வகுப்பறைகள் மாற்றம் தரத்தக்க கற்றல் கற்பித்தல் அனுபவங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் பெற வாய்ப்பளிக்கிறது. இக்கல்வியாண்டில் 865 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.20.76 கோடி மதிப்பீட்டில் திறன் வகுப்பறைகள் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.8.3. கல்வி மேலாண்மை தகவல் முறைமை*

தமிழ்நாட்டில் பயின்று வரும் அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் நிகழ் நிலைத் தகவல்கள் அனைத்தும் கல்வி மேலாண்மை தகவல் முறைமை இணையதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையின் மின்னணு முதுகெலும்பாக கல்வி மேலாண்மை தகவல் முறைமை விளங்குகிறது. தரவுகளின் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை எடுக்க இது உதவுகிறது.

- ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனி அடையாள எண்
- ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனி உள் நுழைவு
- பள்ளி, வட்டாரம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம், மாநில அளவில் அவரவர் நிலைக்குத் தேவையான தரவுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வசதி
- அனைத்து நலத்திட்டங்களையும் மேற்பார்வையிட வசதி
- ஆசிரியர் பணி மாறுதல் கலந்தாய்வு செய்யும் வசதி
- அரசுப் பொதுத் தேர்வு எழுதும் மாணவர் பெயர்ப் பட்டியல் உருவாக்கும் வசதி

➢ பள்ளி ஆய்வுகள் செய்ய வசதி

## 2.9. பள்ளிகளுக்கான நிதி உதவி

### *2.9.1 ஒருங்கிணைந்த பள்ளி மானியம்*

அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கென ஆண்டுதோறும் ஒருங்கிணைந்த பள்ளி மானியம் வழங்கப்படுகிறது. செயல்படாத உபகரணங்களை மாற்றுதல், இணைய வசதி, கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்குதல், ஆண்டு பராமரிப்பு, கட்டடங்களின் பழுதுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளுக்கு இம்மானியத்தைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு பள்ளிக்கும் அனுமதிக்கப்பட்ட மானிய விவரம் பின்வருமாறு :

| வ. எண் | பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை | பள்ளிக்கான மானியத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 1 முதல் 15 வரை | 12,500 |
| 2 | 16 முதல் 100 வரை | 25,000 |
| 3 | 101 முதல் 250 வரை | 50,000 |
| 4 | 251 முதல் 1000 வரை | 75,000 |
| 5 | 1000 க்கு மேல் | 1,00,000 |

தொற்றுநோய் காரணமாக, பள்ளி வளாகங்களை சீரான இடைவெளியில் சுத்தப்படுத்துதல், கிருமி நீக்கம் செய்தல், சோப்பு, கைத் தொற்று நீக்கும் திரவம், வெப்பநிலை உணரி, கழிப்பறைகளுக்கான துப்புரவு பொருட்கள் போன்றவற்றை வாங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2021-22ஆம் கல்வியாண்டில் ரூ.116.28 கோடி பள்ளி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

*2.9.2 நூலக மானியம்*

அறிவு மற்றும் கலாச்சாரத்தின் நுழைவாயிலாக சமுதாயத்தில் அடிப்படைப் பங்கு வகிப்பவை நூலகங்கள் ஆகும். மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சிறந்த கருவியாகப் பள்ளி நூலகங்கள் திகழ்கின்றன. மாணவர்கள் தரமான புத்தகங்களைத் தேடி வாசிப்பதன் வாயிலாக வாசகராக, சிந்தனையாளராக எழுத்தாளராக உருவாகும் வகையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பள்ளியிலும் நூலக வசதியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நூலக நிதியை அரசு ஒதுக்கீடு செய்கிறது. வயதுக்கு ஏற்ற புத்தகங்கள் வாங்குவதற்காக 2020-21ஆம் கல்வியாண்டில் ரூ.30.18 கோடி செலவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வகுப்பிற்கும் நூலக நேரம் என தனியே ஒதுக்கப்பட்டு கால அட்டவணையில் இணைக்கப்படும். ஒவ்வொரு மாணவரும் வாரந்தோறும் நூலகத்திலிருந்து புத்தகத்தைப் பெற ஊக்குவிக்கப்படுவர். வினாடி வினா, பேச்சு, கதை சொல்லல், கட்டுரை எழுதுதல் என இணைச் செயல்பாடுகள் நூலக நேரத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

### *2.9.3. பள்ளி மேலாண்மைக் குழு / பள்ளி மேலாண்மை வளர்ச்சிச் குழு (SMC / SMDC)*

பள்ளி வளர்ச்சிக்கு சமூகப் பங்களிப்பு இன்றியமையாததாகும். ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளி மேலாண்மைக் குழு/ பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு உள்ளது. இக்குழுக்கள், நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிப்பதில் மிக முக்கியப் பங்கு வகிக்கிக்கின்றன. பள்ளிகளுக்கும் சமூகத்திற்கும் இடையே வலுவான பிணைப்பினை உருவாக்குதலும் பள்ளிச் செயல் முறைகளில் பங்கு பெறுவதைச் சமூக கடமை ஆக்குதலும் இக்குழுக்களின் தலையாய பணிகள் ஆகும் .

பள்ளி மேலாண்மைக் குழு / பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு உறுப்பினர்களுக்கு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம்,

குழந்தைகளின் உரிமைகள், குடிமைப் பணிகள், பள்ளி உள்கட்டமைப்பைப் பராமரித்தல், பள்ளி மேம்பாட்டுத் திட்டம், சமூகத் தணிக்கை, கோவிட்-19 ஆகிய இனங்களில் அவர்தம் கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ள பயிற்சி அளிக்கப்படுகிறது. 2020-21ஆம் ஆண்டிற்கு, மேற்கண்ட செயல்பாடுகளுக்காக ரூ.11.13 கோடி ஒதுக்கப்பட்டது.

### 2.10. நலத்திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை நன்கு தொடரவும், பொருளாதார, சமூகக் காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக் கல்வியை நிறைவு செய்வதற்காகவும் அரசு பின்வரும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

#### *2.10.1. பாடப் புத்தகங்கள்*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களது புத்தகச் சுமையினைக் குறைக்கும் நோக்கில் முப்பருவமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பருவத்தின் தொடக்க நாளன்றே புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 2020-21ஆம் கல்வியாண்டில்

73.34 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்தக் கல்வியாண்டிற்கான பாடப் புத்தகங்கள் ஜூன்-ஜூலை மாதங்களில் வழங்கப்பட்டுள்ளன.

### *2.10.2. நோட்டுப்புத்தகங்கள்*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒவ்வொரு பருவத்தின் தொடக்க நாளன்றே நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 2020-21ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினால் 59.28 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

### *2.10.3. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு சத்தான மதிய உணவு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கொரானா பெருந்தொற்றின் காரணமாக பள்ளிகள் திறக்கப்படாததால் 2020-21ஆம் ஆண்டில் 41 இலட்சம் மாணவர்களுக்கு உலர் உணவு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளது.

### *2.10.4. சீருடை*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நான்கு இணைச் சீருடைகளை அரசு வழங்கி வருகிறது. 2020-21ஆம் கல்வி ஆண்டில் 40.63 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

### *2.10.5. காலணிகள்*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் காலணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### *2.10.6. புத்தகப்பை*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப்பை வழங்கப்பட்டு வருகிறது.

### *2.10.7. வண்ணக்குச்சிகள் (Crayons)*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 மற்றும் 2ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து

மாணவர்களுக்கும் வண்ணக்குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

*2.10.8. வண்ணப் பென்சில்கள்*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வண்ணப் பென்சில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

*2.10.9. கணித உபகரணப் பெட்டி*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு கணித உபகரணப் பெட்டி வழங்கப்பட்டு வருகின்றன.

*2.10.10. நில வரைபடப் புத்தகம்*

நில வரைபடப் புத்தகங்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

*2.10.11. கம்பளிச் சட்டை*

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தில்

பயன்பெறும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கம்பளிச் சட்டை வழங்கப்படுகிறது.

### *2.10.12. மழைக்கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறைகள்*

மலைப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களுக்கு மழைக்கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறைகள் வழங்கப்பட்டு வருகிறது.

### *2.10.13. மடிக்கணினி*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

### *2.10.14. மிதிவண்டிகள்*

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பட்டியலினத்தவர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட துறைகளின் வாயிலாக

மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. பள்ளிக் கல்வித் துறை வாயிலாக பிற மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

### *2.10.15. விபத்து நிவாரண நிதியுதவி*

பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின் போது எதிர்பாராது நிகழும் விபத்துகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் மாணவர்களுக்காக இத்திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அரசு மற்றும் உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் நிவாரண நிதியுதவி வழங்கப்படுகிறது. விபத்தால் இறப்பு நேரிடின் ரூ.1,00,000/-ம் பெரிய காயங்களுக்கு ரூ.50,000/-மும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000/-மும் மாணாக்கரின் குடும்பத்திற்கு நிவாரண உதவியாக வழங்கப்படுகிறது. பயனாளிகள் விரைவாக நிவாரணம் பெறுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது. 2020-21ஆம் கல்வியாண்டில் 44 மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற்றுள்ளனர்.

### *2.10.16. இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கான சிறப்பு ஊக்கத் தொகை*

இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைப்பதற்காக சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. 10 மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா ரூ.1,500 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2,000 வீதம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு 12ஆம் வகுப்பு முடித்த பிறகு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. 2020-21ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.262.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 15.85 இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

### *2.10.17. வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய் / தந்தை) மரணமடைந்தாலோ அல்லது விபத்தால் நிரந்தர முடக்கம் அடைந்தாலோ எதிர்பாராத சூழ்நிலையினால் இப்பெற்றோர்களின் குழந்தைகளுக்கு கல்வி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. பாதிக்கப்பட்ட மாணாக்கரின் பெயரில் ரூ.75,000/- தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது. 2020-21ஆம் கல்வியாண்டில்

இத்திட்டத்தினைத் தொடர ரூ.5.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*2.10.18. பேருந்துப் பயண அட்டை*

மாணாக்கர் தங்களது பள்ளிக்கு எளிதில் வந்து செல்வதற்கு வசதியாகஅனைத்து பள்ளிகளிலும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் போக்குவரத்துத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.11. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (Samagra Shiksha)**

கல்விசார் குறியீடுகளையும், கல்வியின் தரத்தையும் உயர்த்த இந்திய அரசால் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் பள்ளிக் கல்வியை தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை என இருந்தாலும் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை கல்வியானது தொடர்ச்சியாக அமைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அனைவருக்கும் கல்வித் திட்டம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், ஆசிரியர் கல்வி என்னு திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமாகும். ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசால் முறையே 60:40 என்ற விகிதத்தில் இத்திட்டத்திற்கு நிதி பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மேலும், பள்ளி செல்லும் குழந்தைகளின் உள்ளடக்கிய கல்வி மற்றும் சமநிலைக் கல்வியை உறுதி செய்வதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 2.12. நிதி ஒதுக்கீடு

2021-22ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கென ரூ.16,080.96 கோடியும் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்விக்கென ரூ.15,650.34 கோடியும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 3. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

## 3.1. முன்னுரை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் தமிழ்நாடு பொதுக் கல்வி வாரியப் பாடத்திட்டம் மற்றும் கலைத்திட்டத்தினைப் பின்பற்றிக் கல்வி கற்பிக்கும் தனியார் சுயநிதிப் பள்ளிகளாகும். 4,451 மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தற்போது சுமார் 35 இலட்சம் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். இவ்வகைப் பள்ளிகள் கள அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்களால் கண்காணிக்கப்படுகின்றன.

## 3.2. தொலைநோக்கு

மழலையர் வகுப்பு முதல் மேல்நிலைக் கல்வி வரை அனைத்து சுயநிதி மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் கருத்தாக்கம் செய்து திட்டமிட்டுத் தரமான கல்வி அளிப்பதை உறுதி செய்வதும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2011ஐ நடைமுறைப்படுத்துவதும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தின் தொலைநோக்காகும்.

### 3.3. குறிக்கோள்கள்

- பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்க அனுமதி மற்றும் தொடர் அங்கீகாரம் வழங்குதல்
- விதிகளின்படி முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகமையாகச் செயல்படுதல்.
- சட்டங்கள், விதிகள் மற்றும் அரசால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

### 3.4. பங்களிப்பு மற்றும் பொறுப்புகள்

#### *3.4.1. அனுமதி / அங்கீகாரம்*

அரசால் நிர்ணயிக்கப்படும் விதிகள் மற்றும் வரையறைகள் நிறைவு செய்யப்படும் நிலையில் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், மெட்ரிகுலேசன்

பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரால் அனுமதி வழங்கப்படுகிறது. 2020-21ஆம் கல்வியாண்டில் 35 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் 44 மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### *3.4.2. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்*

தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006 சட்டமாக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 2006 – 07ஆம் ஆண்டில் 1ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் அடுத்தடுத்த வகுப்புகளுக்குத் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. அனைத்துத் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களும் 1ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்புவரை தமிழ்ப் பாடத்தினைப் பயின்று வருகின்றனர்.

### *3.4.3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 நடைமுறைப்படுத்துதல்*

இச்சட்டத்தின் பிரிவு 12 (1) (சி)இன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவுநிலை வகுப்பில் 25 % இடஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்ப்பதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்த மாநில அளவில், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் முதன்மைத் தொடர்பு அலுவலராகவும், மாவட்ட அளவில், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டத் தொடர்பு அலுவலர்களாகவும் உள்ளனர்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 12 (1) (சி)இன் கீழ் சேர்க்கைக்கான விண்ணப்பம் இணைய வழியாகப் பெறப்பட்டு வருகிறது. 2020 – 21ஆம் கல்வியாண்டில் 70,379 குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். 2020 – 21ஆம் ஆண்டிற்குக் கல்விக் கட்டணத் தொகை பள்ளிகளுக்கு ஈடுசெய்யும் பொருட்டு ரூ.469.63 கோடி நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2020-21ஆம் ஆண்டில்

எல்.கே.ஜி முதல் 8ஆம் வகுப்பு வரை கல்விக்காக ஒரு குழந்தைக்குச் செலவிடப்படும் தொகையினை தமிழ்நாடு அரசு அறிவிப்பு செய்துள்ளது. பள்ளிகளுக்குத் தொகையினை ஈடுசெய்வதற்கான பணி நடைபெற்றுவருகிறது.

## 3.5. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009

தமிழக அரசால், தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டு அதற்கான விதிகள் வகுக்கப்பட்டன. இச்சட்டத்தின்படி, தனியார் பள்ளிகள் மாணாக்கர்களிடம் வசூலிக்க வேண்டிய கட்டணத்தினை நிர்ணயம் செய்ய தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக்குழு அமைக்கப்பட்டது.

கொரானா தீநுண்மி பரவலைக் கருத்தில்கொண்டும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும், மாத ஊதியம் பெறுவோர், தொழில் முனைவர் போன்றவர்களிடம் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 85% கட்டணமும், வருமானம் இழப்பைச் சந்திக்கும் பெற்றோர்களிடம் 75% கட்டணமும் 6 தவணைகளில் வசூல் செய்துகொள்ள தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.6. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018

மாநிலப் பள்ளிக் கல்வி பொதுப் பாடச் சட்டம், 2010 நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், அனைத்துத் தனியார் பள்ளிகளும், மாநிலப் பொதுக் கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018 சட்டமாக்கப்பட்டது. இதற்கான விதிகளை வகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.7. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2021-22ஆம் ஆண்டிற்கு ரூ. 472.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

### 4.1. அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பது மாநில அளவில் பள்ளிக்கல்வியில் தரமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான பொறுப்பு வகிக்கும் முதன்மை நிறுவனமாகும். இந்நிறுவனமானது, நாட்டின் சிறந்த கல்வி வல்லுநர்களைக் கொண்டு 1 முதல் 12ஆம் வகுப்புக்கேற்ற கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்களை உருவாக்கி வருகிறது. ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தும் நோக்கோடு ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை வடிவமைத்து வருகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாணவர்கள், புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கேற்ப தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கும் மென்திறன்களைப் பெறுவதற்கும் ஏற்றவாறு புதிய கல்வித் தொழில்நுட்ப வசதிகளை ஒருங்கிணைத்து வழிகாட்டுகிறது. பள்ளிக்கல்வியை நிறைவு செய்யும் மாணவர்கள், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது.

இந்நிறுவனம், கல்விசார் சிக்கல்களுக்குத் தீர்வுக் காணத்தக்க வகையில் ஆசிரியர்கள் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களை ஆராய்ச்சிகளையும் செயலாராய்ச்சிகளையும் மேற்கொள்ளச் செய்து கல்விச் சிக்கல்களுக்கான தீர்வுகளை வகுப்பறையில் நடைமுறைப்படுத்த ஏற்றவர்களாக உருவாக்கி, வழிகாட்டி வருகிறது. மின்னியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து நிலை குழந்தைகளின் கற்றல் தரத்தை மேம்படுத்துவதில் பள்ளிக்கல்வித் துறைக்கு உதவும் வகையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முன்னோடி நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

## 4.2. தொலைநோக்கு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது மாணவர்கள் புதிய தொழில்நுட்ப உலகினைப் போட்டி மனப்பான்மையுடன் எதிர்கொள்ள உகந்தவர்களாக மாற்றும் வகையில் கற்றல் விளைவுகள், முழுமையான, மகிழ்வுடன் கற்றலுக்கான பல்வகைக் கற்பித்தல் நெறிமுறைகள், மாற்றுவழிக் கற்பித்தல் உத்திகள், மின்னியவழிக் கற்றல் மற்றும் உயர்நிலைச்

சிந்தனைத் திறனை ஊக்குவிக்கும் வகையிலான மதிப்பீடு ஆகியவற்றின் பள்ளி அமைப்பை உருவாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

### 4.3. நோக்கங்கள்

- கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், கற்றல் துணைப்பொருள்கள், செய்தி மடல்கள், கற்றல் கருவிகள், பல்லூடக மின்னியப் பொருள்கள் மற்றும் கல்விசார் கட்டகங்களை உருவாக்குதல்.
- பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கும் மாணவ ஆசிரியர்களுக்கும் முறையே பணியிடை மற்றும் பணிமுன் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.
- வகுப்பறைச் செயல்பாடுகளில் கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.
- பள்ளிக்கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- பேரிடர், இயற்கைச் சீற்றங்கள், பெருந்தொற்றுப்பரவல் ஆகியவற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குக்

காலச்சூழலில், மாற்றுவழிக் கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிந்துரைத்தல்.

- கல்வித்தர மேம்பாட்டிற்கான மதிப்பீட்டு அமைப்புகளையும் அணுகுமுறைகளையும் உருவாக்குதல், நடைமுறைபடுத்துதல், கண்காணித்தல், நிலைநிறுத்துவதற்கான குறைதீர்த் தொடர் இடைவினைகளை உருவாக்கி அளித்தல்.

**4.4. பங்கு மற்றும் பணிகள்:**

- நெறிமுறைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதில் மாநிலத்தின் முதன்மைக்கல்வி அமைப்பாகச் செயல்படுகிறது.

- உலகெங்கிலும் ஏற்படும் விரைவான வாழ்க்கை மாற்றங்களைக் கருத்தில் கொண்டு கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்குகிறது.

- ஆசிரியர் மையக் கற்பித்தலிலிருந்து மாணவர் மையக் கற்றலுக்கு மாற்றும் வகையில் கற்றல் விளைவுகளைப் பின்பற்றிக் கற்பிக்கும் வண்ணம் ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துகிறது.

- கோவிட்-19, பெருந்தொற்றுக் காரணமாக ஏற்பட்ட ஊரடங்கு காலச்சூழலில் மாணவர்களின் தடையற்ற கற்றலை உறுதி செய்வதற்காகக் காணொலிப்பாடங்கள், வானொலிப்பாடங்கள், இணைப்புப்பாடப் பயிற்சிக் கட்டகங்கள், புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்ற கற்றல் வளங்களை உருவாக்கி அளிக்கிறது.

- தொடக்க நிலை முதல் மேனிலை வரை அனைத்துப் பள்ளிகளுக்கும் தேவை அடிப்படையிலான பயிற்சிகளைத் திட்டமிட்டு, வடிவமைத்து, உருவாக்கி, அளித்து வருகிறது.

- தேசிய மற்றும் மாநில அடைவு ஆய்வுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் மாணவர்களுக்கு எங்கெங்கு கற்றல் தடைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து அத்தகைய இடைவெளிகளை நீக்குவதற்கான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்து வருகிறது.

## 4.5. திட்டங்களும் செயல்பாடுகளும்

### *4.5.1. கற்றல் விளைவுகளைப் பகுத்தாராய்தல்*

மாணவர்கள், பாடக்கருத்துகளைப் புரிந்து கொள்வதை உறுதிசெய்யும் தரநிலைகளாகக் கற்றல் விளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வகுப்பறையில் பொருத்தமான கற்பித்தல் நெறிமுறைகள், பின்பற்றப்படுவதை இக்கற்றல் விளைவுகள் உறுதி செய்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 1 முதல் 10 வகுப்புகளுக்கான கற்றல் விளைவுகளை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலுள்ள கல்வியாளர்களைக் கொண்டு இணையவழியாகப் பகுத்தாராயும் செயலை மேற்கொண்டது; ஒவ்வொரு கற்றல் விளைவிற்கும் உரிய திறன்கள் மற்றும் நுண்திறன்கள் உருவாக்கப்பட்டன. பாடநூல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு உரிய சீரமைப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### *4.5.2. ஆசிரியர்களுக்கான இணையவழி (Online) பயிற்சி*

கோவிட்-19, பெருந்தொற்றுக் காலத்தில் அனைத்துப் பள்ளிகளின் வழக்கமான நேரடிக் கற்பித்தல், கற்றல், மதிப்பீட்டுச் செயல்முறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிகள்

தடைபடும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்கள் இணையம் வழியாக அணுகி பயன்படுத்தும் வகையில் இணையவழிப் பாடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியோடு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியும் இணைந்து இணையவழிக்கான பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கியுள்ளன. இப்பல்லூடகக் கட்டகமானது, பாடப்பகுதி, காணொலிகள், (விளக்கங்கள்/ சோதனைகள்/ செய்துகாட்டும் பகுதிகள்/ செயல்பாடுகள்), செயல்பாடுகளின் தொகுப்பு மற்றும் புரிதலைச் சோதிக்கும் வினாடி வினாக்களை உள்ளடக்கி உள்ளது.

'பள்ளியில் பாதுகாப்பு' மற்றும் 'பள்ளி மேலாண்மைக் குழு' குறித்த இணையவழிப் பயிற்சிக் கட்டகங்கள் ரூ.1.63 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு ஆசிரியர்களுக்கான வலைதளத்தில் (TNTP) பதிவேற்றப்பட்டுள்ளன. இக்கட்டகங்களில் கோவிட்-19, பெருந்தொற்று சார்ந்த கருத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிமூலம் 7,66,852 பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களும் 2,73,957 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் பயன் அடைந்துள்ளனர்.

### *4.5.3. பள்ளி ஆசிரியர்களுக்கு தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பப் பயிற்சி வழங்குதல்*

கற்றல் தேவைகளை சமாளிக்க மற்றும் அறிவை மேம்படுத்த முறையான தொடர் பயிற்சி அவசியம். ஆசிரியர்கள் தங்கள் தொழில் மற்றும் சுய வளர்ச்சிக்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தற்போது நிலவும் கோவிட்-19 தொற்று நோய் சூழ்நிலையில் குழந்தைகளுக்கு தொடர்ச்சியான கற்றலை உறுதி செய்ய, மின் கற்றல் மாற்று முறையாகும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் கற்றல் மற்றும் கற்பித்தல் திறன்களை தொடர்ந்து மேம்படுத்தும் வகையில் மின்கற்றலை ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தடையற்ற இணைய வசதி கொண்ட உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு ஐந்து நாட்கள் இணையவழிப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது 2.24 இலட்சம் தொடக்க நிலை முதல் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பல கட்டங்களாக பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சித் திட்டமானது கணினி, இணையம் மற்றும் அதன் பயன்பாடு, உயர்தொழில் ஆய்வகப் பயன்பாடு மற்றும் கல்வி மேலாண்மை தகவல் முறைமையின் முக்கிய அம்சங்களைப் பற்றிய அடிப்படை அறிவை ஆசிரியர்களுக்கு வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி ஒவ்வொரு தொகுதியிலும் நேரடி அமர்வுகள், சுய விளக்க காணொலிகள், அனுபவம், மதிப்பீடு, ஒதுக்கீடு மற்றும் பின்னூட்டம் அமையப் பெற்றுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டம் இணையதளத்தி கிடைக்கும் பல்வேறு அம்சங்கள் மூலம் ஆசிரியர்கள் தங்கள் பாடப் பொருள் தயாரித்தலுக்கான காலத்தைக் குறைக்க மற்றும் கற்பித்தல் திறனை அதிகரிக்க உதவும்.

### *4.5.4. தேசிய பொம்மைக் கண்காட்சி – 2021*

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே பொம்மை வழிக்கற்பித்தலை ஊக்குவிக்க, 2021, பிப்ரவரி மாதம் 27முதல் மார்ச் மாதம் 2ஆம் நாள்வரை நடைபெற்ற தேசிய மெய்நிகர் பொம்மைக் கண்காட்சியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் பங்கேற்று கல்வி சார்ந்த 25 பொம்மைகளைக் காட்சிப்படுத்தியது. நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் நிறுவனங்கள்

காட்சிப்படுத்திய காணொலிக் கண்காட்சிகளைப் பார்வையிட மாநிலத்திலுள்ள ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு, 'கல்வி பொம்மைக் கண்காட்சி' தொடர்பான ஒரு சிற்றேட்டினைத் தயாரித்துள்ளது. தேசியக் காணொலிப் பொம்மைக் கண்காட்சியில் தமிழ்நாட்டின் கல்விசார் பொம்மைக் கண்காட்சி சார்ந்த படங்கள், விளக்க உரைகள், காணொலி மற்றும் சிற்றேடு ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குச் செறிவான கல்வி உள்ளீடுகளை அளித்தன.

### *4.5.5. மின்னிய முன்னெடுப்புகள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் மற்றும் காணொலிப் பாடப்பகுதிகள் 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 15,000 விரைவுத் துலங்கல் குறியீடுகள் இணைக்கப்பட்டுள்ளன. கடினப்பகுதிகள், அசைவூட்டப்பட்ட மின்னியப் பாடப்பகுதியாக மாற்றப்பட்டு விரைவுத் துலங்கல் குறியீட்டில் இணைக்கப்பட்டுள்ளன. இது மாணவர்களின் கற்றலை மேம்படுத்தியுள்ளது. 1 முதல் 9 வகுப்புகளுக்கு

செறிவூட்டப்பட்ட பயிற்சிப் புத்தகங்கள் ஏப்ரல்-2021முதல் கல்வி தொலைக்காட்சி வாயிலாகவும் வீட்டில் உள்ள பிற வளங்களைப் பயன்படுத்திக் கற்கும் வகையிலும் அளிக்கப்பட்டுள்ளன. பயிற்சிப் புத்தகங்களில் உள்ள விரைவுத் துலங்கல் குறியீட்டுக் கற்றல் வளங்கள் மின்னிய வளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. 2021-22ஆம் கல்வியாண்டில் அனைத்து மாணவர்களுக்கும் செறிவூட்டப்பட்ட பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *4.5.6. ஆராய்ச்சிச் செயல்பாடுகள்*

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள், பாடப்பொருள் புரிதல் ஆகியவற்றில் தடையாக இருக்கும் சிக்கல்களைக் கண்டறிந்து பள்ளி வழிகாட்டி அமைப்புகளுக்கு உதவி செய்ய ஆராய்ச்சி செயல்பாடுகள் பயன்படுகின்றன. இவை இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அளிக்கின்றன. கல்வி மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயலாராய்ச்சிகள், மாநிலம் முழுமையும் குறிப்பிட்ட தலைப்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அவை, கற்றல் இழப்பு, பாடநூல்களின் செயல்திறன் , கல்வி தொலைக்காட்சிக் காணொலிப் பாடங்களின் தாக்கம், மடிக்கணினி-

காணொலிப் பாடங்களின் தாக்கம், உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் பயன்பாடு, இணையவழிக் கற்றல் தளங்களின் தாக்கம், பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளித் தலைமை மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவினர் பயன்படுத்திய புதிய உத்திகள், விரைவுத் துலங்கல் குறியீட்டின் பயன்பாடு என்பனவாகும். 2020-21ஆம் கல்வியாண்டில் 375 செயலாராய்ச்சிகளும், 257 செயல் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட அளவில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள், பாடம் சார்ந்த பகுதிகள், மதிப்பீடு, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள், சமூகப் பிரச்சினைகள் சார்ந்தவைகளாக இருந்தன. இந்த ஆய்வுச் செயல்திட்டங்களும் செயலாராய்ச்சிகளும் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகளின் முடிவுகள், ஆசிரியர்களுக்குப் பகிரப்பட்டு உரிய கற்பித்தல் உத்திகள் மூலம் ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகள் சரிசெய்யத் திட்டமிடப்படும்.

### *4.5.7. பள்ளி சுகாதாரம் மற்றும் நலவாழ்வுத் திட்டம்*

பள்ளி சுகாதாரம் மற்றும் நலவாழ்வு சார்ந்த 11 கருப்பொருள்களைக் கொண்ட முழுமையான கட்டகம்

வேலூர், அரியலூர், கரூர், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் தமிழக தேசிய நலவாழ்வு இயக்கத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், மக்கள் நலவாழ்வுத்துறையைச் சார்ந்த பணியாளர்கள் உள்ளடங்கிய மாநில வளக்குழுவிற்குத் தேசிய அளவிலான அமைப்பு பயிற்சியை நடத்தி முடித்துள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் பள்ளி, உடல்நலம் சார்ந்து 11 கருப்பொருள்களில் உருவாக்கப்பட்ட காணொலிகள், ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு ஆசிரியர்களுக்கான வலைதளத்தில் (TNTP) பதிவேற்றம் செய்யப்பட உள்ளன.

**4.6. கோவிட் – 19 பெருந்தொற்றுப் பரவல் காலத்தில் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட முன்னெடுப்புகள்**

கோவிட் – 19, பெருந்தொற்றுப் பரவல் காரணமாக முழுஊரடங்கு ஏற்பட்ட நிலையில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, மாணவர்களின்

கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு, பலதிட்டங்களை முன்னெடுத்துள்ளது. பெருந்தொற்று, மாணவர்களிடையே பரவாதிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. தவிர்க்க இயலா இச்சூழலில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாணவர்களின் கற்றல் இழப்பைச் சரி செய்யும் வகையில் மாணவர்கள் நேரடியாக வகுப்பிற்கு வந்து கற்கும் வாய்ப்பில்லாத சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கல்வி தொலைக்காட்சி, யூடியூப் வலையொளி, மடிக்கணினி மற்றும் வானொலி மூலம் மாணவர்களை அணுகியுள்ளது. கூடுதலாகப் பாடப்புத்தகங்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் நலன்கருதி, பின்வரும் செயல்பாடுகள், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *4.6.1. மின்னிய காணொலிப் பாட உருவாக்கத்திற்கான முன்னெடுப்பு*

மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்தே பல்வேறு வழிகளில் ஆர்வத்துடன் பாடப்பொருளைக் கற்பதற்குத் தேவையான வழிகளை உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பு பள்ளிக்கல்வித் துறைக்கு உள்ளது. தற்போதைய

மனஅழுத்தம் மிகுந்த இச்சூழலில், மாணவர்களைக் கற்றலில் தொடர்ந்து ஈடுபடுத்துவதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது, 2ஆம் வகுப்புமுதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள அனைத்துப் பாடநூல்களிலுள்ள பாடப்பொருள்களுக்கு (30 நிமிடங்கள் காலஅளவிற்கு) 7434 காணொலிப் பாடங்களை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் மூலம் தயாரித்துள்ளது. அவை கல்வித் தொலைக்காட்சி வாயிலாகவும் அரசின் ஒப்புதல் பெற்ற 9 தனியார் தொலைக்காட்சிச் சேவைகள், 4 DTH அலைவரிசை மற்றும் 6 கேபிள் தொலைக்காட்சி இணைப்பு வாயிலாகவும் ஒளிபரப்பப்படுகின்றன.

### *4.6.2. முதன்மைப்படுத்தப்பட்ட பாடப்பகுதிகளை உருவாக்குதல்*

கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவல் ஊரடங்கு காரணமாக உருவான கற்றல் இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மாற்று உத்திகளை மாநில அரசுக்கு வழங்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவானது, இப்பெருந்தொற்றுச் சூழலில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் சுமையைக் குறைக்கும் பொருட்டு,

2020-21ஆம் கல்வியாண்டில் 1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தின் முதன்மைப்படுத்தப்பட்ட பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப் பரிந்துரைத்தது.

இப்பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து நேரடி வகுப்புகள் தடைபட்ட 2020-21ஆம் கல்வியாண்டிற்கு, அனைத்து வகுப்புகளுக்கும் முதன்மைப்படுத்தப்பட்ட பாடப்பகுதியைத் தேர்ந்தெடுக்கும் பணியை, இணையவழியாக மேற்கொண்டனர். இதன்மூலம், ஒவ்வொரு வகுப்பிற்கும் பரிந்துரைக்கப்பட்ட கற்றல் விளைவுகள் விடுபட்டுவிடாமல் 63 நாட்களில் முடிக்க திட்டமிடப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்ட பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டன.

### *4.6.3. இணைப்புப்பாடப் பயிற்சிக் கட்டகங்கள் (Bridge Course Materials)*

மாணவர்களின் கற்றல் இழப்பைக் குறைக்கும் வகையில் 2020–21ஆம் கல்வியாண்டிற்கு 2 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப் பாடப்பொருளின் அடிப்படைக் கருத்துகளைத் தொகுத்து ஒவ்வொரு

வகுப்பிற்கும் இணைப்புப் பாடப்பயிற்சி கட்டகம் உருவாக்கப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இணைப்புப் பாடப்பயிற்சி கட்டகங்கள் உருவாக்கப்பட்டிருப்பினும் ஆசிரியர்களின் இடைவினையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு இணைப்புப் பாடப்பயிற்சி கட்டகத்தின் அடிப்படையில் 2ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பாடவாரியாகக் காணொலிப் பாடங்கள் உருவாக்கப்பட்டு அவை கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன. ஒளிபரப்புக்கான காலஅட்டவணை அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் இணைப்புப் பாடங்களைக் காணொலிப் பாடங்களாகக் கற்றபின் மாணவர்கள், மதிப்பீட்டுப் பகுதியினை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### *4.6.4. பயிற்சிப்புத்தகங்கள் (Work Book)*

2020–21ஆம் கல்வியாண்டில் கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் மாணவர்கள் நேரடிக் கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபட இயலாச் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் 1 முதல் 9 வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வி தொலைக்காட்சி, கற்றல்

விளைவுகளின் அடிப்படையிலான பயிற்சிப் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிப் புத்தகங்கள், மாணவர்கள் வீட்டிலேயே செய்துபார்க்கும் வகையிலான செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. இப்பயிற்சிப் புத்தக்கத்தின் அடிப்படையில் 2 முதல் 9 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் காணொலிப் பாடங்கள் உருவாக்கப்பட்டு, அவை கல்வித் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டன. காணொலி வகுப்புகள் வாயிலாக மாணவர்கள், அலகுவாரியாகப் பாடங்களைப் புரிந்து கொண்டு பயிற்சிப் புத்தங்களிலுள்ள செயல்பாடுகளைத் தாங்களாகவே செய்து, அவற்றை புலனம் (Whatsapp) மற்றும் பிற சமூக வலைத்தளங்கள் போன்ற மாற்றுவழிகள் மூலம் பாட ஆசிரியரிடம் ஒப்படைக்கவும் வழிவகுக்கப்பட்டது.

### *4.6.5. கல்வி தொலைக்காட்சி*

2 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான அனைத்து பாடப்பொருட்களுக்கும் உருவாக்கப்பட்ட மின்னியப் பாடப்பொருள்கள், வாரத்தின் ஏழு நாள்களும் 24 மணிநேரமும் ஒளிபரப்பும் பணியைக் கல்வித் தொலைக்காட்சி அலைவரிசை மேற்கொண்டது. கற்பித்தல் – கற்றல் அனுபவத்தைப் பாதுகாப்புடன் பெறும்வகையில், நாட்டிலேயே முதன்முறையாக ‘வீட்டுப்பள்ளி’ என்னும்

முன்னோடித்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் இல்லங்களுக்கே பள்ளிச்சூழல் கொண்டு செல்லப்பட்டது. மாணவர்கள், தாமாகக் கற்றுக்கொள்ள உதவும் வகையில் காணொலிப் பாடங்கள், விலையில்லா மடிக்கணினிகளில் பதிவேற்றப்பட்டன. 2 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான காணொலிப் பாடங்கள் தயாரிக்கப்பட்டு வார நாள்களில் காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை ஒளிபரப்பப்பட்டன.

இவற்றைத் தொடரும் வகையில், 11ஆம் வகுப்புக்கான காணொலிப் பாடங்கள், காலை 5:30 மணி முதல் காலை 8 மணி வரை ஒளிபரப்பப்பட்டன. அந்நிகழ்ச்சிகளின் மறுஒளிபரப்பு இரவு 7 மணி முதல் 10 மணி வரை ஒளிபரப்பப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 19.06.2021 அன்று 2021-22 கல்வியாண்டிற்கு 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு மேம்படுத்தப்பட்ட கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார். இக்கல்வியாண்டில் ஒளிபரப்பப்படும் காணொலிகளைப் பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியோடு தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.6.6. வலையொளி (YouTube) அலைவரிசை

கல்வி தொலைக்காட்சி ஒளிபரப்புகளைக் காணத் தவறியவர்களின் நலனுக்காக, ஒளிபரப்பு செய்யப்பட்ட காணொலிகள் அனைத்தும் கல்வி தொலைக்காட்சியின் அதிகாரப்பூர்வ வலையொளி(YouTube) இணைய அலைவரிசையில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. கல்வி தொலைக்காட்சியின் கால அட்டவணையும் பிறதகவல்களும் www.kalvitholaikaatchi.com என்னும் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ளன. வலையொளி அலைவரிசை வாயிலாக மிகக் குறுகிய காலத்தில் இந்நிகழ்ச்சிகளை 18.8 மில்லியன் பார்வையாளர்களும் 3,32,000 சந்தாதாரர்களும் கண்டு பயனடைந்துள்ளனர்.

### 4.6.7. சைகைமொழிப் பயன்பாடு

உள்ளடங்கிய மின்-வகுப்பறையை உருவாக்கும் விதமாக 9 மற்றும் 10 ஆகிய வகுப்புகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வி நலனுக்காகச் சைகை மொழியுடன் கூடிய காணொலிப்பாடங்கள் தனித்துவத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

### 4.6.8. வானொலிப் பாடங்கள் (Radio Lesson)

இணையம் மற்றும் தொலைக்காட்சி வசதி இல்லாத குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கும் கற்றல் வளங்கள் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், முதற்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1168 வானொலிப்பாடங்களைத் (15 நிமிடங்கள்) தயாரித்துள்ளது. அகில இந்திய வானொலியின் 10 நிலையங்கள் (சென்னை, கோவை, மதுரை, திருச்சி, புதுச்சேரி, திருநெல்வேலி, ஊட்டி, தருமபுரி, காரைக்கால் மற்றும் நாகர்கோவில்) வாயிலாகத் திங்கள்முதல் வெள்ளிவரை நாள்தோறும் மாலை 5 மணியிலிருந்து 6 மணி வரை மாணவர்களுக்கு வானொலி வழியே கல்வியை வழங்கி வருகிறது. இதற்கான மாதாந்திர காலஅட்டவணையும் பள்ளிக்கல்வித் துறையால் அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 4.6.9. இணைய வழியாக மாணவர்களை மதிப்பீடு செய்தல்

பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்கள் கற்றல் அடைவினை அறிந்து கொள்ள இணைய வழியாக மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் மூலம் கற்றல் அடைவினை ஒட்டி ஆசிரியர்கள் கற்பித்தலை திட்டமிட்டனர். 9 - 12ஆம் வகுப்புகளுக்கு மாணவர்களின் அடிப்படைக் கற்றல்

நிலையைச் சோதித்தறிய மதிப்பீட்டுக் கருவிகளை வடிவமைத்துள்ளது. இம்மதிப்பீட்டுக் கருவிகள், உயர் தொழில் நுட்ப ஆய்வகம் வழியாக (HI-TECH Lab) 15,74,715 மாணவர்களுக்கு இணையவழியில் நடைமுறைபடுத்தப் பட்டன. முடிவுகளானது பள்ளிவாரியாக, வகுப்புவாரியாக மற்றும் பாடவாரியாக, பகுப்பாய்வு செய்யப்பட்டு மாணவர்களின் தேவைக்கேற்பக் கற்பிக்கும் பொருட்டு ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

*4.6.10. புத்தாக்கப் பயிற்சிக் கட்டகம்*

கோவிட் 19 காரணமாக 2020-21ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணவர்கள் எந்தவொரு தேர்வுமின்றி அடுத்த வகுப்பிற்கு செல்ல தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்கள். எனவே முந்தைய வகுப்பில் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடு செய்வதற்காக மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முந்தைய வகுப்பு வரை உள்ள முக்கிய மற்றும் அடிப்படைக் கருத்துக்களை உள்ளடக்கியும் மற்றும் கற்றல் விளைவுகள் ஏதும் விடுபடாத வகையிலும் புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கியுள்ளது. பள்ளிகள் திறக்கப்படும் போது முதலில் புத்தாக்கப் பயிற்சிக் கட்டகத்தை முடித்த பிறகு,

முதன்மைப்படுத்தப்பட்ட பாடப்பகுதிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.7. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2021-22ஆம் ஆண்டிற்கு **ரூ**.95.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 5. அரசுத் தேர்வுகள் இயக்ககம்

## 5.1. அறிமுகம்

மாநிலப் பொதுத் தேர்வுகளைத் தரமாகவும், நல்ல செயல்திறத்துடனும் மேம்படுத்தும் நோக்கத்தில் அரசுத் தேர்வுகள் இயக்ககம் 1975-இல் அமைக்கப்பட்டது. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாநிலப் பொதுத் தேர்வுகளைத் தவிர, இவ்வியக்ககம் தேசிய அளவிலான திறனாய்வுத் தேர்வு (NTSE), தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS) மற்றும் தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST) போன்ற உதவித் தொகைக்கான தேர்வுகள் நடத்துவதற்குரிய பொறுப்புகளைக் கொண்டுள்ளது.

## 5.2. குறிக்கோள்கள்

- அனைத்து வகையான தேர்வுகளையும் நியாயமான முறையில் பாதுகாக்கப்பட்ட சூழலில் நடத்துதல்.
- மின்னணு மயமாக்கல் மூலம் மதிப்பீட்டு முறைகளை மேம்படுத்துதல்.

- குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.
- எதிர்காலத்தில் உயர்கல்வி பயில்வதற்கான சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில், உயர் சிந்தனைத் திறன் கொண்ட வினாத்தாள்கள் அமைத்து மாணவர்களிடையே திறனாய்வு சிந்தனைத் திறனை வளர்ப்பது.

**5.3. 2020–21ஆம் கல்வியாண்டில் 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான பொதுத்தேர்வுகள் இரத்து செய்தல்.**

ஆண்டுதோறும், அரசு தேர்வுகள் இயக்ககம் கிட்டத்தட்ட 27 இலட்சம் தேர்வர்களுக்கு பொதுத் தேர்வுகளை நடத்துகிறது. இருப்பினும், கோவிட் -19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டும், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை கருத்தில் கொண்டும், 2020-21ஆம் கல்வியாண்டுக்கான 10, 11 மற்றும் 12 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் இரத்து செய்யப்பட்டன.

2020-21ஆம் கல்வியாண்டிற்கான 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவதற்கான

கணக்கீட்டு முறையை ஆய்வு செய்து பரிந்துரைக்க 9 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அக்குழு வழங்கிய அறிக்கையின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு 12-ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் 19.07.2021 அன்று வெளியிடப்பட்டது. அனைத்து 10 மற்றும் 11 வகுப்பு மாணவர்களுக்குச் தேர்ச்சி பெற்றதற்கானச் சான்றிதழ் வழங்கப்படும்.

## 5.4. துணைத் தேர்வுகள் நடத்துதல்

ஒவ்வொரு ஆண்டும் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் அதே கல்வியாண்டில் தேர்வர்கள் தங்கள் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகிறது. செப்டம்பர் 2020-இல் 12-ஆம் வகுப்பு துணைத்தேர்வினை 50,523 தேர்வர்களும் 10, 11 தேர்வுகள் முறையே 37,837 மற்றும் 21,475 தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர். 2020-21–ஆம் கல்வியாண்டிற்கான ஆகஸ்ட் 2021, 12- ஆம் வகுப்பு துணைத் தேர்விற்கு 45,654 தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர். செப்டம்பர் 2021 –இல் நடைபெறவுள்ள 10 மற்றும் 11-ஆம் வகுப்பு துணைத்தேர்வுகளுக்கு முறையே 31,885 மற்றும் 8,846 தனித்தேர்வர்கள் பதிவு செய்துள்ளனர்.

## 5.5. மாணவர்கள் நலன்

### *5.5.1. மொழிப்பாடங்களை ஒரே தாளாக்குதல்*

மேல்நிலை முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகள் மற்றும் SSLC தேர்வில் மொழிப் பாடங்களில் கற்றல் நிலை மதிப்பீட்டில் சமரசமின்றி தாள் I மற்றும் தாள் II ஆகியவை ஒரே தாளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

### *5.5.2 . மாநிலப் பொதுத்தேர்வுகளில் தேர்வு நேரத்தை அதிகரித்தல்*

மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில், 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாநிலப் பொதுத்தேர்வுகளில் தேர்வு நேரம் 2.30 மணி நேரத்திலிருந்து 3.00 மணி நேரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### *5.5.3. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்.*

தமிழ் வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பொதுத்தேர்வெழுதுவதற்கான தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

### *5.5.4. சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள். (CWSN)*

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

- சிறப்புக் கவனம் தேவைப்படும் அனைத்து குழந்தைகளுக்கும் தரை தளத்தில் இருக்கை வசதி செய்யப்படுகிறது.
- பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்கு தனி அறை வசதி செய்யப்படுகிறது.
- சொல்வதை எழுதுபவர் நியமனம்: சொல்வதை எழுதுபவராக தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் தகுதி பெற்ற இளங்கலை பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
- கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.
- கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.

- இடைநிலை வகுப்பு பயிலும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு செய்முறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.
- எதிர்பாராத விபத்துகள் / காயங்கள் ஏற்பட்ட மாணவர்களுக்கு சொல்வதை எழுதுபவர் நியமனம் மற்றும் கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.

### 5.6. சிறைகளில் தேர்வு மையங்கள்

சிறைவாசிகளும் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற, அவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பது அவசியமாதலால் ஒவ்வோராண்டும் சிறைகளில் தேர்வு மையம் அமைக்கப்பட்டு தேர்வுகள் நடத்தப்படுகிறது. மார்ச் 2020-இல் நடைபெற்ற 11 மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வுகளுக்கு முறையே 89 மற்றும் 62 சிறைவாசிகளும் மற்றும் செப்டம்பர் 2020-இல் நடைபெற்ற 10-ஆம் வகுப்புத் தேர்வில் 143 சிறைவாசிகளும் தேர்வெழுதியுள்ளனர். 2020-21-ஆம் கல்வியாண்டிற்கான, ஆகஸ்ட் / செப்டம்பர் 2021, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு துணைத் தேர்வுகளுக்கு முறையே 203, 68 மற்றும் 68 சிறைவாசிகள் பதிவு செய்துள்ளனர்.

## 5.7. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்

### *5.7.1. எட்டாம் வகுப்புத் தேர்வு (தனித்தேர்வர்கள்)*

குறைந்தபட்ச எட்டாம் வகுப்பு கல்வித் தகுதியினை அளிக்கும் வகையில், நேரடித் தனித்தேர்வர்களுக்கு எட்டாம் வகுப்பு தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகிறது. 2020-21 கல்வியாண்டில் செப்டம்பர் 2020-இல் நடத்தப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வில் 5,159 தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

### *5.7.2. அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்*

வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கு, ஓவியம், தையல், விவசாயம், அச்சுக்கலை, இசை, கைத்தறி மற்றும் நெசவு போன்ற பாடப்பிரிவுகளில் அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

### *5.7.3. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு*

இவ்வியக்ககத்தால் தொடக்கக்கல்விப் பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. 2020-21 கல்வியாண்டிற்குரிய தேர்வு செப்டம்பர் 2021-இல் நடைபெறவுள்ளது. இத்தேர்விற்கு 9,536 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

### *5.7.4. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ( UPSC ) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் ( ssc ) தேர்வுகளை நடத்துதல்*

ஆண்டுதோறும் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

## 5.8. உதவித் தொகைக்கான தேர்வுகள்

### *5.8.1. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST)*

ஊரகப் பகுதிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் இத்தேர்வினை எழுத தகுதியுடையோர் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம், தொடரும் நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2020-21 ஆம் கல்வியாண்டில் ஜனவரி 2021-இல் நடைபெற்ற தேர்வில்

47,147 மாணவர்கள் தேர்வெழுதி, அதில் 3,434 பேர் உதவி தொகை பெற தகுதி பெற்றுள்ளனர்.

### *5.8.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS)*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 8-ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித்தொகை தேர்வினை தேர்வெழுத தகுதியுடையவர் ஆவர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 9 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டு தோறும் ரூ.12,000/- (மாதம் ரூ.1000/- வீதம்) உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில் 6,695 மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுகின்றனர். 2020-21ஆம் ஆண்டில் பிப்ரவரி 2021-இல் நடைபெற்ற (NMMS) தேர்வில் 1,37,743 மாணவர்கள் தேர்வெழுதியதில் 6,695 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### *5.8.3. தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE)*

தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இவ்வியக்ககம் செயல்பட்டு இத்தேர்வினை நடத்துகிறது. கல்வி ஆண்டில், மத்திய / மாநிலப் பள்ளி குழுமங்களில் 10-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதிபடைத்தவர்கள் ஆவர். இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் முதல்நிலைத் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டாம் நிலைத் தேர்வினை தேசிய அளவில் NCERT நடத்துகிறது. 2020-21-ஆம் கல்வியாண்டில் டிசம்பர் 2020-இல் நடைபெற்ற தேர்வில் 1,09,888 மாணவர்கள் பங்கேற்றதில் 434 மாணவர்கள் முதல் நிலைத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 200 தமிழக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் வரை மாதம் ரூ.1250/-, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் வரை மாதம் தோறும் ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக மானியக்குழுவினால் நிர்ணயிக்கப்படும்

உதவித் தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

### 5.9. இயக்ககத்தினை கணினி மயமாக்குதல்

மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரித்தல் முதற்கொண்டு தேர்வு முடிவுகள் வெளியிடுதல் வரையிலான அனைத்து தேர்வுப் பணிகளும் இணைய வழி ஆக்கப்பட்டுள்ளன. இயக்ககத்தின் அனைத்து செயல்பாடுகளும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் துணையுடன் முழு அளவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

### 5.10. இணையதள சேவைகள்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.dge.tn.gov.in மூலம் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை எளிதாகப் பெறுவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

- தேர்வு அறிவிக்கைகள்
- தேர்வுக்கால அட்டவணைகள்
- விண்ணப்பப் படிவங்கள்

- தேர்வுக் கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- முந்தைய ஆண்டு தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கான பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்தல்.
- தேர்வுக்கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்துதல்.

### 5.11. மின் ஆவணக் காப்பகம்

மின் ஆவணக்காப்பகம் சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள உதவுகிறது.

இடைநிலை மற்றும் மேல்நிலைத் தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்ணைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தில் உள்நுழைந்து அவர்களது மின்னனு மதிப்பெண் சான்றிதழினை அரசுத்தேர்வுகள் இயக்கக மதிப்பெண் விவரத் தொகுப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. 73,12,162 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 5.12. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்

தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளி வளாகங்களில் 237 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும் தேர்வர்கள் இணைய வழியில் எளிதாக விண்ணப்பிக்க இச்சேவை மையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 5.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பொழுது பதியப்பட்ட கைப்பேசி எண்ணிற் தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், தேர்வு முடிவுகள் இணைய வழி வாயிலாகப்

வெளியிடுவதற்கு www.tn.results.nic.in, www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in ஆகிய மூன்று இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்நிலை பொதுத் தேர்வுக்குரிய விடைத்தாள்களின் நகல்கள் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விடைத்தாள்களின் நகல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் அவர்களது மதிப்பெண்கள் மறுகூட்டலுக்கோ அல்லது அவர்களது விடைத்தாள்களின் மறு மதிப்பீட்டிற்கோ விண்ணப்பிக்கலாம்.

### 5.14. சான்றிதழ்கள் வழங்குதல்

#### *5.14.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல்*

தேர்வு முடிவுகள் வெளிவந்த மறுநாள் முதல், இடைநிலைத் தேர்வெழுதிய தேர்வர்கள் அவர்களின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழையும், மேல்நிலைத் தேர்வெழுதியோர் மதிப்பெண் பட்டியலையும் இணையதளம்

(www.dge.tn.nic.in) வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### *5.14.2. மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கான தனித்தனியான மதிப்பெண் சான்றிதழ்கள்*

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாகத் தேர்ச்சி அடைந்தவர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் தனித்தனியே வழங்கப்படுகிறது. அத்துடன் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுகிறது. இடைநிலை / மேல்நிலை தேர்வுகளை ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### *5.14.3. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் பெற்றோர் பெயர் அச்சிடுதல்.*

10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் பெயரோடு பெற்றோர் பெயரும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

### *5.14.4. மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்.*

தேர்வர்களின் விண்ணப்பத்தின் பேரில் மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இவ்வியக்கக இணைய தளத்தில் உள்ளன. 2020-21ஆம் ஆண்டு 3500 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் 4800 மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### *5.14.5. புலப்பெயர்ச்சி சான்றிதழ்*

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும் தேர்வர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 2020-21-ஆம் ஆண்டு 5,394 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *5.14.6. மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை சரிபார்த்தல்*

மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை கோரி உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பணி நியமன

அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் உண்மைத்தன்மை அறியும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2020-21-ஆம் ஆண்டில் 4,51,689 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டுள்ளது.

5.15. **நிதி ஒதுக்கீடு:**

2021-22-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ.134.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

### 6.1. முன்னுரை

வயது வந்தோருக்கான கல்வி என்பது வயது வந்தோர் அனைவரும் புதிய முறையிலான அறிவு, திறன்கள், அணுகு முறைகள் அல்லது மதிப்புகளை பெறும் வகையில், அவர்களை முறையான மற்றும் நிலையான கற்றல் செயல்பாடுகளில் ஈடுபடச் செய்து பயனடைய வைக்கக் கூடிய ஒரு பயிற்சியாகும். வயது வந்த கல்லாதோர் அனைவருக்கும் கல்வியை வழங்கி அதன் மூலம் அவர்களின் அறிவுத் திறன்களை மேம்படுத்திக் கொள்ள வழிவகை செய்தலையும் அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் கல்வி வாய்ப்புகளில் முன்னேற்றத்தை உருவாக்கிக் கொள்ளச் செய்தலையும் வயது வந்தோர் கல்வித் திட்டம் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, தமிழகத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத படிக்கத் தெரியாத வயது வந்தோர் அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவை வழங்கிடும் வகையில் கடந்த 1976ஆம் ஆண்டு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் நிறுவப்பட்டது. முன்குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை எட்டிடும் வகையில் வயது வந்தோருக்கான பல்வேறு

எழுத்தறிவுத் திட்டங்கள் தொடர்ச்சியாக இவ்வியக்ககத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டுள்ளன.

## 6.2. தொலைநோக்கு

எழுத்தறிவற்ற அனைத்து வயது வந்தோருக்கும் தரமான அடிப்படை எழுத்தறிவுக் கல்வியினை வழங்குவதன் மூலம் மாநிலத்தில் முழு எழுத்தறிவினை உறுதி செய்தல்.

## 6.3. நோக்கங்கள்

- எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்.
- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படச் செய்தல்.

➢ புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

### 6.4. கற்போம் எழுதுவோம் இயக்கம்

தமிழகத்தில், 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, 'கற்போம் எழுதுவோம்' என்கிற வயது வந்தோருக்கான புதிய எழுத்தறிவுத் திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் முறையே 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15 வயதுக்கு மேற்பட்ட, முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 3.10 இலட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடுதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2020-21ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தால் ரூ.6.34 கோடி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கும் மேலாக 3.22 இலட்சம் கற்போர் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள 15,823 கற்போர் எழுத்தறிவு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். இம்மையங்களில்,

தன்னார்வல ஆசிரியர்களின் உதவியுடன் கற்போருக்கான கற்பித்தல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கற்போருக்கான கட்டகம் மற்றும் தன்னார்வல ஆசிரியர்களுக்கான வழிகாட்டிப் புத்தகம் ஆகியன மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளன. கற்போருக்கான கட்டகங்களிலுள்ள பாடக் கருத்துக்கள் QR Codes வாயிலாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும், வயதுவந்தோர் பயனடையும் வகையில், ஒலி-ஒளி வடிவில் தயார் செய்யப்பட்டுள்ள காணொளிப் பாடங்கள் கல்வித் தொலைக் காட்சியின் வாயிலாக தொடர்ந்து ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

## 6.5. வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

தமிழகத்தில், வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் (Aspirational Districts) சிறப்பு எழுத்தறிவுத் திட்டமானது ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் இலக்கு 15 வயதுக்குமேற்பட்ட 1,68,716 பேர் முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாதோர் ஆவர். இவர்களுள், 40,288 பேர் இத்திட்டத்தின் முதற்கட்டத்தில்

தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்றுள்ளனர். மீதமுள்ள கற்போருக்கு 2022 ஆம் ஆண்டிற்குள் அடிப்படை எழுத்தறிவை வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடிப்படை எழுத்தறிவை முடித்த கற்போரின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு கொடுக்கபட்டுள்ளன.

| இராமநாதபுரம் மாவட்டம் | | | விருதுநகர் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|
| ஒன்றியம் | கற்போர் மையங்களின் எண்ணிக்கை | அடிப்படை எழுத்தறிவை முடித்த கற்போர்களின் எண்ணிக்கை | ஒன்றியம் | கற்போர் மையங்களின் எண்ணிக்கை | அடிப்படை எழுத்தறிவை முடித்த கற்போர்களின் எண்ணிக்கை |
| இராமநாதபுரம் | 11 | 521 | விருதுநகர் | 49 | 1987 |
| R.S. மங்களம் | 30 | 1197 | சாத்தூர் | 61 | 2453 |
| நைனார்கோயில் | 10 | 400 | காரியாப்பட்டி | 49 | 1971 |
| திருவாடாணை | 13 | 650 | அருப்புக்கோட்டை | 40 | 1640 |
| மண்டபம் | 50 | 2000 | நரிக்குடி | 53 | 2120 |
| திருப்புள்ளாணி | 32 | 1280 | திருச்சுழி | 49 | 1957 |
| கடலாடி | 42 | 2035 | ஸ்ரீவில்லிபுத்தூர் | 73 | 2945 |
| பரமகுடி | 24 | 1200 | இராஜபாளையம் | 92 | 3895 |
| போகலூர் | 19 | 950 | சிவகாசி | 42 | 1680 |
| கமுதி | 63 | 3140 | வேம்பக்கோட்டை | 51 | 2303 |
| முதுகுளத்தூர் | 38 | 1900 | வத்திராயிருப்பு | 56 | 2064 |
| **மொத்தம்** | **332** | **15273** | **மொத்தம்** | **615** | **25015** |

**ஆதாரம்: பமவகஇ**

## 6.6. சிறைவாசிகளுக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

2020-21 ஆம் ஆண்டில், சிறைவாசிகளுக்கான சிறப்புஎழுத்தறிவுத் திட்டமானது, திருவள்ளூர், கடலூர், வேலூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 மத்திய சிறை வளாகங்களிலும் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட சிறை வளாகத்திலும் சிறைத் துறை ஒருங்கிணைப்புடன் ரூ.14.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. இச்சிறப்புத் திட்டத்தின் கீழ் 1844 சிறைவாசிகள் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்றுள்ளனர். அடிப்படை எழுத்தறிவை முடித்த சிறைவாசிகளின் சிறைவாரியான எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | சிறைவாசிகளின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | திருவள்ளூர் | 412 | 50 | 462 |
| 2 | கோயம்புத்தூர் | 250 | - | 250 |
| 3 | மதுரை | 173 | 30 | 203 |
| 4 | கடலூர் | 105 | - | 105 |
| 5 | சேலம் | 123 | 26 | 149 |
| 6 | திருநெல்வேலி | 200 | - | 200 |
| 7 | திருச்சி | 300 | - | 300 |
| 8 | வேலூர் | 100 | 25 | 125 |
| 9 | புதுக்கோட்டை | 50 | - | 50 |
| மொத்தம் | | 1713 | 131 | 1844 |

ஆதாரம்: பமவகஇ மற்றும் சிறைத்துறை

**6.7. நிதி ஒதுக்கீடு:**

தமிழக அரசால், 2021-22 நிதியாண்டிற்கான வரவுசெலவு திட்டத்தின் கீழ் ரூ.9.50 கோடி நிதி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 7. பொது நூலகங்கள்

## 7.1. அறிமுகம்

ஒரு பொது நூலகம், தனிமனிதர்கள் மற்றும் சமூகக் குழுக்களின் வாழ்நாள் கற்றல், சுய முடிவெடுத்தல் மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கு ஒரு அறிவுசார் நுழைவு வாயிலாகத் திகழ்கிறது. கலாச்சார, அறிவுசார் தகவல்களை அனைவருக்கும் இலவசமாகவும் சமமாகவும், வழங்குவதன் மூலம் அதிகாரமிக்க வலிமையான சமூகத்தை உருவாக்குகிறது. வளமான, தரமான தகவல் வளங்களை மக்களுக்கு வழங்க வேண்டும் எனும் நோக்கத்தில், நவீன அறிவுசார் தகவல் மையங்களாகப் பொது நூலகங்கள் மாற்றப்பட்டு வருகின்றன.

## 7.2. இலக்கு

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும், வலிமையான தகவல் அடித்தளத்தை உருவாக்கி, அதன் மூலம் பொது மக்களின் சுய, சமூக, பொருளாதார மற்றும் அறிவுசார்ந்து மேம்படுத்துதல், மற்றும் தமிழ் மொழி, வரலாறு மற்றும் நமது உயரிய கலாச்சாரம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

7.3. குறிக்கோள்கள்

- சிறந்த நூலகச் சேவையின் மூலம் அனைத்துத் தரப்பினரின் தகவல் தேவையினைப் பூர்த்தி செய்தல்.
- பழைய மற்றும் அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து, பாதுகாத்தல்.
- 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் நூலக வசதியை ஏற்படுத்துதல்.
- பொது நூலகங்களில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் .
- பொது நூலகங்களில் தரமான நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் நூல்களை வழங்குதல்.
- நூலகங்களில் நவீன தொழில் நுட்பத்தினைப் புகுத்தி நூலகச் சேவையினை மேம்படுத்துதல்.
- நவீன வசதிகளுடன் புதிய நூலகங்களை உருவாக்குதல்

## 7.4. தமிழகத்தில் நூலக இயக்கம்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 ன்படி, தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டன. பொது நூலக இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் தற்பொழுது தமிழகமெங்கும் 4,640 நூலகங்கள் செயல்படுகின்றன.

### *7.4.1 கன்னிமாரா பொது நூலகம்*

தமிழ்நாட்டின் மாநில மைய நூலகமாக கன்னிமாரா பொது நூலகம் செயல்பட்டு வருகிறது. சென்னை எழும்பூரிலுள்ள அருங்காட்சியக வளாகத்தில் இயங்கி வரும் இந்நூலகம் 1896 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் குறிப்புதவி நூலகமாக விளங்கிய இந்நூலகம், 1930 ஆம் ஆண்டு முதல் பொது மக்களுக்கு நூல்களை இரவல் வழங்கும் நூலகமாகச் செயல்பட்டு வருகிறது.

கன்னிமாரா பொது நூலகத்தில் இலக்கியம், வரலாறு மற்றும் அறிவியல் சார்ந்த 9,07,424 புத்தகங்கள் உள்ளன. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாகச் செயல்பட்டுவரும் இந்நூலகத்திற்கு, நூல்கள் (செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) விநியோகச் சட்டம் 1954 ன்படி இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு

பிரதியானது இலவசமாகப் பெறப்படுவதன் காரணமாக, அதனை வாசிக்கும் ஆர்வமுடைய வாசகர்களின் வருகையானது, இன்றளவும் தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கிறது.

நூலகச் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் 1,46,142 உறுப்பினர்கள் உள்ளனர். கன்னிமாரா பொது நூலகத்தில் அரிய நூல்கள் பிரிவு, நுண்படப் பிரிவு, பாடநூல்கள் பிரிவு, பருவ இதழ்கள் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, குழந்தைகள் பிரிவு மற்றும் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம் ஆகிய பல்வேறு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மற்றும் 1950 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மின்னுருவாக்கம் செய்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் www.connemarapubliclibrarychennai.com எனும் இணைய தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### *7.4.2 அண்ணா நூற்றாண்டு நூலகம்*

சென்னை கோட்டூர்புரத்தில் 3.75 இலட்சம் சதுரஅடி பரப்பளவில், ரூ.197.43 கோடி செலவில் கட்டப்பட்ட, தெற்காசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம், 9 தளங்களைக் கொண்டு மிகப்பெரிய வளாகத்தில் செயல்படுகிறது. இந்நூலகம், 15 செப்டம்பர் 2010 அன்று மேனாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர். மு. கருணாநிதி அவர்களால் பொது மக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நூலகத்தில் 6.14 இலட்சம் எண்ணிக்கை கொண்ட அனைத்து வகையான நூல்கள் இடம் பெற்றுள்ளன. வாசகர்களின் தேவைக்கேற்ப நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பார்வைத்திறன் குறைபாடுடையோர் பிரிவு, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, பாடநூல் பிரிவு, தமிழ் மற்றும் தென்னிந்திய மொழி நூல்கள் பிரிவு, ஓலைச்சுவடிகள் பிரிவு, போட்டித் தேர்வு பிரிவு, அரிய நூல்கள் பிரிவு, நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் ஆகிய பிரிவுகளுடன் அனைத்து தரப்பினரையும் கவரும் விதமாக இந்நூலகம் அமைந்துள்ளது. இந்நூலகத்தில் இதுவரை 1,312 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

பார்வைத்திறன் குறைபாடுடையோர் பிரிவானது, 2600 பிரெய்லி புத்தகங்கங்கள், 1050 ஒலிப்புத்தகங்கள் மற்றும் 1.1 TB அளவிற்கு இதர மின்னனுத் தகவல் வளங்களைக் கொண்டுள்ளது. இப்பிரிவில் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்கள் மின்னஞ்சல் வழியாக ஒலி வடிவில் வாசகர்களுக்கு அனுப்புதல் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கு இணைய வழியில் விண்ணப்பிக்க உதவுதல் ஆகிய சேவைகளும் வழங்கப்படுகின்றன.

வாசகர்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் உடனடியாகப் பெறுவதற்கு, ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது, இதனை வாசகர்கள் www.annacentenarylibrary.org என்ற இணைய தளத்தின் மூலம் பயன்படுத்தலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வந்த அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமானது அதன் முழுமையான வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவுடன் தற்பொழுது அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இயங்கி வருகிறது.

பொன்மாலைப் பொழுது' என்ற தலைப்பில் பல்வேறு அறிவுத்தளங்களில் உள்ள சிறந்த ஆளுமைகளுடனான

நிகழ்ச்சிகள் மற்றும் போட்டித் தேர்விற்குத் தயாராகும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. கொரோனா ஊரடங்கு காலத்தில் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்காகப் பல்வேறு போட்டித் தேர்வுகள் சார்ந்த 15 நிகழ்வுகள் இணையவழியில் நடத்தப்பட்டன.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் புதுப்பொலிவுடன் புனரமைக்க, கட்டிட அமைப்பில் ஏற்பட்ட பழுதுகள் சரி செய்யப்படும். குளிர்சாதன வசதி மற்றும் இதர மின்சார வசதிகள் புதிய தொழில்நுட்பத்தில் மேம்படுத்தப்படும். வன்பொருள், மென்பொருள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும், மேலும் மின்னூலகம் உருவாக்கப்பட்டு உலகமெங்கும் உள்ள வாசகர்கள் பயன்படுத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

### *7.4.3. சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம்*

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், இந்தியாவின் பழமை வாய்ந்த நூலகங்களில் ஒன்றாகும். 16ஆம் நூற்றாண்டு நாயக்க மன்னர்களால் தொடங்கப்பட்ட இந்நூலகமானது மன்னர் சரபோஜி (1798-1832) காலத்தில் தனது புகழின் உச்சத்தை

அடைந்தது. பின்னர், 1918 ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

உலகின் புகழ் பெற்ற அறிவுக் களஞ்சியமான இந்நூலகத்தில் மொத்தமுள்ள 47,334 கையெழுத்துப் பிரதிகளில் 24,165 ஓலைச்சுவடிகளாகவும், 23,169 காகித கையெழுத்துப் பிரதிகளாகவும், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன, மேலும், இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்களைக் கொண்ட 45,000 புத்தகங்கள், வரைபடங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலகப் பணியாளர்கள் நலன் மற்றும் நூலக மேம்பாட்டிற்காக அரசால் ஆண்டுதோறும் ரூ.75 இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

### *7.4.4. மாவட்ட மைய நூலகங்கள்*

தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950ன்படி 32 மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள நூலகங்களை மின்னனு மயமாக்கிட மாநில அரசானது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

பயன்பெறும் வகையில், நூறு ஆண்டுகள் பழமையான அரிய புத்தகங்களை மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்கள் பயன்படுத்த மின் புத்தக வாசிப்பான் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்நூலகங்களில் பல்வேறு துறை சார்ந்த 69,91,513 நூல்கள், பருவ இதழ்கள், குறிப்புதவி நூல்கள் மற்றும் 13,03,482 உறுப்பினர்கள் உள்ளனர். 2020-21 ஆம் ஆண்டில் இந்நூலகங்களை 5,78,414 வாசகர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

### *7.4.5. கிளை நூலகங்கள்*

5,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட ஊர்களில் கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,926 கிளை நூலகங்கள் 61,49,861 உறுப்பினர்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் 65,48,715 வாசகர்கள் இந்நூலக வசதிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இந்நூலகங்களில் குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், பணிநாடுவோர் மற்றும் மூத்த குடிமக்களுக்காகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### *7.4.6. ஊர்ப்புற நூலகங்கள்*

1996 ஆம் ஆண்டு முதல் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயம் நன்மதிப்பை பெறும் வண்ணம் பொது, சமூக மற்றும் மக்கள் நேரடியாகக் கூடும் இடமாகத் திகழும் இந்நூலகங்களில் 1,97,01,947 நூல்கள் மற்றும் 20,74,376 உறுப்பினர்கள் உள்ளனர். 2020-21 ஆம் ஆண்டில் 42,64,656 வாசகர்கள் இந்நூலகங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

### *7.4.7. நடமாடும் நூலகங்கள்*

மலைப்பாங்கான மற்றும் எளிதாகச் செல்ல இயலாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு புத்தகங்கள், பருவ இதழ்கள், ஒளிப்படங்கள், வரைபடங்கள் மற்றும் குறுந்தகடுகளைக் கொண்டு சேர்க்கும் பணியில், 14 மாவட்டங்களில் நடமாடும் நூலகங்கள் செயல்பட்டு வருகிறது. கிராமப்புற பள்ளி மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் வகையில் உரிய கால இடைவெளிகளில் வாகனம் மூலம் பள்ளிகளுக்குச் சென்று, இந்நூலகங்கள் மாணவச் சமூகத்திற்கு சேவையாற்றி வருகிறது. நடமாடும் நூலகங்கள் மூலம் 26,981 உறுப்பினர்கள் மற்றும் 5,608 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

*7.4.8. பகுதி நேர நூலகங்கள்*

தற்போது செயல்பட்டு வரும் 751 பகுதிநேர நூலகங்களில் 3,20,779 உறுப்பினர்கள் உள்ளனர், 2020-21 ஆம் ஆண்டில் 2,17,155 வாசகர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**7.5. கருணை அடிப்படையில் பணி வழங்குதல்**

பொது நூலக இயக்ககத்தின் கீழ் இயங்கும் நூலகங்களில் பணிபுரிந்து, பணியிலிருக்கும் பொழுது மரணமடைந்த நூலகர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு பொது நூலக இயக்ககம் பணிநியமன ஆணைகளை வழங்கியுள்ளது. 2021 ஜூலையில், 10 நூலகர் நிலை III பணியிடங்களும் 1 இளநிலை உதவியாளர் பணியிடமும் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டுள்ளன.

**7.6. நிதி ஆதாரம்**

*7.6.1. நூலக நிதி*

பொது நூலகத் துறையின் முக்கிய வருவாய் நூலக வரியே ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948, பிரிவு 12(1)(a)-இன்படி, உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும்

சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரி வசூலிக்கப்படுகிறது, நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் புதுப்பித்தல், நூலகங்களுக்குத் தேவையான எழுது பொருட்கள், நுகர் பொருட்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், மேலும் நூலகர்கள், ஊர்ப்புற நூலகர், பகுதிநேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் நூலக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் நேரடியாக நூலக நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2020-21ஆம் ஆண்டில் நூலக வரியாக ரூ.71.02 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

### *7.6.2.இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மானியம்*

கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மத்திய அரசின் இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளையானது, இந்தியாவில் செயல்பட்டு வரும் பொது நூலகங்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நூல்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குதல், நூலகர்களுக்குச் சிறப்புப் பயிற்சியளித்தல், கருத்தரங்கு நடத்துதல், நூலகக் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களில் குழந்தைகள் பிரிவு

உருவாக்குதல் மற்றும் நூலகத்தின் அடிப்படை வசதியினை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கி பொது நூலகங்களை ஊக்குவித்து வருகிறது.

இந்த அறக்கட்டளை பொது நூலகங்களுக்கு ஆண்டுதோறும் மானியமாக ரூ.3.00 கோடி வழங்கி வருகிறது. இத்துடன் மாநில அரசு தனது இணை மானியமாக ரூ.3.00 கோடி வழங்குகிறது.

**7.7. பொது நூலகங்களின் உட்கட்டமைப்பு**

தமிழ் நாட்டில் செயல்பட்டு வரும் 4,640 பொது நூலகங்களில் 1,780 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 2,532 நூலகங்கள் வாடகையில்லா இலவசக் கட்டடங்களிலும் 314 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் மற்றும் 14 இயங்கு நூலக வாகனங்களிலும் செயல்பட்டு வருகின்றன. புதிய கட்டிடடங்கள் கட்டுவதற்கு 2020-21ஆம் ஆண்டில் ரூ.93.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**7.8. நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல்**

பொதுவாக, ஓராண்டில் வசூலிக்கப்படும் நூலக வரி வசூலில் 25 சதவீதம் நூல்கள் வாங்குவதற்கு ஒதுக்கீடு

செய்யப்படுகின்றது, மேலும் பருவ இதழ்கள் வாங்குவதற்கான ஒதுக்கீட்டுத் தொகை 6.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக 2021 ஜுலை மாதம் முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**7.9. நூலகங்களைக் கணினிமயமாக்கல்**

தமிழ் நாட்டிலுள்ள அனைத்து 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 314 முழுநேர கிளை நூலகங்களில் இணைய வசதியுடன் கூடிய கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

'Koha' எனப்படும் நூலக மேலாண்மைக்கான கட்டற்ற மென்பொருளைப் பயன்படுத்திப் பொது நூலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 30 முழுநேர கிளை நூலகங்கள் 'Koha' மென்பொருளை நூலக மேலாண்மைக்காகப் பயன்படுத்தி வருகின்றன. இதன் மூலம் நூல் இரவல் வழங்கல் மற்றும் நூலக தொழில் நுட்பப் பணிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

## 7.10. மின்னுருவாக்கம் (Digitization)

தமிழ்க் கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழி பற்றிய பரந்துபட்ட அறிவை எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்குடன், பொது நூலக இயக்ககத்தின் மூலம் டிஜிட்டல் நூலகம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த டிஜிட்டல் நூலகத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முகமையாக அண்ணா நூற்றாண்டு நூலகம் திகழ்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம், கன்னிமாரா பொது நூலகம், தமிழ்நாடு தொல்லியல் நூலகம், தமிழ்நாடு காப்பக நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் மற்றும் தனியார் நூலகங்கள் போன்ற நூலகங்களிலுள்ள அரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூல்களை மின்னுருவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 25000 புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள், 1000 வரைபடங்கள் மற்றும் 5000 பனை ஓலை கையெழுத்துப் பிரதிகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 7.11. ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (Union Catalogue)

பொது நூலக இயக்ககத்தின் மூலம், 32 மாவட்ட மைய நூலகங்கள், கன்னிமாரா பொது நூலகம், அண்ணா

நூற்றாண்டு நூலகம் மற்றும் பிற அரசு உதவி பெறும் நூலகங்களிலுள்ள புத்தகங்களின் விவரங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நூற்பட்டியலை உருவாக்கும் பணி நடைபெற்று வருகின்றது, இதன் மூலம், மேற்படி நூலகங்களின் அனைத்துப் புத்தகங்களின் விவரங்களும் சர்வதேசத் தரநிலைகளின் அடிப்படையில் சரி செய்யப்பட்டு, ஒரே இணையதளத்தின் மூலம் வாசகர்கள் அனைத்துப் பொதுநூலகங்களிலும் உள்ள புத்தகங்களைத் தேடும் வசதி ஏற்படுத்தப்படும்.

## 7.12. பார்வைத்திறன் குறைபாடுள்ளோருக்கான ஒலி நூல்கள் உருவாக்குதல்

பார்வைத்திறன் குறைபாடுடையவர்கள் எளிதில் அணுகும் வகையில் கல்வி மற்றும் போட்டித் தேர்வு தொடர்பான முக்கியமான அச்சுப் புத்தகங்கள் Accessible Text, DAISY ePub3 மற்றும் ஒலி வடிவங்களில் மாற்றப்பட்டு இணையதளத்தின் மூலமாக பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றப்படும் புத்தகங்கள் அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிகள் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

### 7.13. ஸ்மார்ட் டிவி வசதி

பொது நூலகங்களில் வருகை தரும் வாசகர்களுக்கு, கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்வுகள், போட்டித் தேர்வுகளுக்காக நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள், வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் மற்றும் பிரபல எழுத்தாளர்களின் சொற்பொழிவுகள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தும் வகையில் 32 மாவட்ட மைய நூலகங்களிலும் ஸ்மார்ட் டிவி நிறுவப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வு ஆர்வலர்களின் நலன் கருதி 100 முழு நேர நூலகங்களில் ஸ்கேனர்கள் மற்றும் நகலெடுக்கும் கருவிகள் நூலக ஆணைக்குழு நிதியில் நிறுவப்பட்டுள்ளன.

### 7.14. இணைய வசதி

வாசகர்களின் நலனுக்காக ஹை-பேண்ட் (Hi-Band) இணைய வசதி அனைத்து மாவட்ட மைய நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட மைய நூலகங்களையும் ஸ்மார்ட் நூலகங்களாகத் தரம் உயர்த்தும் வகையில், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் ஆர்வமுள்ளவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், உலகளாவிய செய்தித்தாள்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பருவ இதழ்கள்

போன்றவற்றை இணையம் மூலம் பதிவிறக்கம் செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 7.15. குழந்தைகளுக்கான சேவைகள்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொதுநூலகங்களில் முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை குழந்தைகளுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கோடைவிடுமுறை காலகட்டத்தில் இசை, ஓவியம் மற்றும் கைவினை வகுப்புகள், யோகா, கதை சொல்லல், அறிவியல் சோதனைகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கோடை விடுமுறையில் குழந்தைகளுக்குப் பயனளிக்கும் வகையில் செயல்முறை அடிப்படையிலான சிறப்பு நிகழ்ச்சிகள் 'கோடைக் கொண்டாட்டம்' என்ற பெயரில் நடைபெற்று வருகின்றன. கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக இச்சிறப்பு நிகழ்ச்சி நடைபெறவில்லை.

### 7.16. வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் பொது மக்களின் பங்கேற்பை வளர்ப்பதற்கு கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட

வாசகர் வட்டம் ஒவ்வொரு நூலகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. வாசகர் வட்டமானது நூலகங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்தி வளப்படுத்துதல், வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல், புதிய நூலகங்களை நிறுவுதல், நூலகப் பணிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுடன் புதிய எழுத்தாளர்களையும் மற்றும் புதிய நூல்களையும் அடையாளம் காட்டுவதுடன் நூல்களை வாசகர்களுடன் இணைப்பதன் மூலம் வாசகர்களிடையே நல்லுறவை ஏற்படுத்துகிறது. புதிய நூல்கள் மற்றும் எழுத்தாளர்கள் அறிமுகம் செய்தல், இலக்கிய சொற்பொழிவுகள், புத்தகக் கண்காட்சி நடத்துதல், சொற்பொழிவு, கதை சொல்லுதல், கட்டுரை மற்றும் வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகள் மாவட்ட மைய நூலகங்கள், மற்றும் கிளை நூலகங்களில் நடத்தப்படுகின்றன.

### 7.17.புரவலர்கள்/பெரும் புரவலர்கள் / கொடையாளர்கள்

ஒருவர், நூலகத்திற்கு ரூ.1,000 வழங்குவதன் மூலம் புரவலராகவும், ரூ.5,000 செலுத்துவதன் மூலம் பெரும் புரவலராகவும் மற்றும் ரூ.10,000 வழங்குவதன் மூலம் கொடையாளராகவும் ஆகிறார்கள். இதுவரை 1,36,287 பேர் புரவலராகவும், 1,316 பேர் பெரும் புரவலராகவும், 596 பேர் கொடையாளராகவும் சேர்ந்துள்ளனர். இதன் மூலம்

வசூலிக்கப்படும் தொகையானது நிரந்தர வைப்பாக வங்கியில் செலுத்தப்பட்டு, அதன் மூலம் ஆண்டுதோறும் பெறப்படும் வட்டித் தொகையானது நூலகங்களின் வளர்ச்சிப் பணிகளை வலுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

### 7.18. நூலக நிகழ்ச்சிகள்

பொது நூலகங்களில் ஆண்டுதோறும் ஆகஸ்டு 12 அன்று **தேசிய நூலகர் தினம்**, மே 22 அன்று **நூலக தினம்**, நவம்பர் 14-20 **நூலக வாரம்** மற்றும் ஏப்ரல் 23 அன்று **உலக புத்தக தினம்** ஆகிய நிகழ்வுகள் கொண்டாடப்படுகின்றன.

### 7.19. நூலக விருதுகள்

வாசகர்களுக்குச் சிறந்த சேவை புரியும் நூலகங்களுக்கு **சிறந்த நூலக விருது**, வழங்கப்படுகிறது. சிறப்பாக சேவையாற்றும் நூலகர்களுக்கு **முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது** வெள்ளிப் பதக்கம் மற்றும் ரூ.5000 ரொக்கப் பரிசுடன் வழங்கப்படுகிறது. நூலகங்களின் வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பு வழங்கும் வாசகர் வட்ட தலைவர்களைப் பாராட்டும் விதமாக ரூ.5,000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன் கூடிய **நூலக ஆர்வலர் விருது** வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 7.20. நிதி ஒதுக்கீடு

பொது நூலக இயக்ககத்திற்கு 2021-22 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.140.25 கோடி அரசு வழங்கியுள்ளது.

## 8.ஆசிரியர் தேர்வு வாரியம்

### 8.1 அறிமுகம்

பள்ளிக் கல்வித் துறையின் கீழ்வரும் பள்ளிகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக 1987ஆம் வருடம் ஆசிரியர் தேர்வு வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை மற்றும் சட்டக் கல்வி ஆகியவற்றிற்கான ஆசிரியர்கள்/உதவிப் பேராசிரியர்களை தெரிவு செய்யும் பணியினை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும், தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தும் முகவாண்மையாக ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டு வருகிறது.

### 8.2 நோக்கம்

பயன்பாட்டுத்துறையின் தேவைகளுக்கேற்ப, தகுந்த திறமையான பணிநாடுநர்களைத் தெரிவு செய்வது ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும். தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் உதவியுடன், ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான வெளிப்படையான தெரிவு முறையினை ஆசிரியர் தேர்வு வாரியம் பின்பற்றி வருகிறது.

## 8.3 தெரிவு நடைமுறைகளை மேம்படுத்துதல்

பணித்தெரிவுக்கான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றினை உறுதி செய்திடும் பொருட்டு தெரிவு நடைமுறைகள் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு கணிணி மயமாக்கப்பட்டுள்ளன. ஒளி வருடி தகவல் பெறும் (OMR) தொழில்நுட்பத்திற்கு பதிலாக கணிணி வழி தேர்வு நடத்தப்படும் முறையினைப் பயன்படுத்தி தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பணித்தெரிவுகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு தேர்வர்கள் தேர்வெழுதிய விடைத்தாளின் மென் நகல்கள் மின்னஞ்சல் மூலம் தேர்வர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தின் மந்தனதன்மை வாய்ந்த பகுதிகள் அனைத்தும் மூடிய மின்சுற்று தொலைகாட்சிப் படவீழ்த்தி(CCTV)உதவியுடன் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எண்ம அடையாளம் காணும் முறையினை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயோமெட்ரிக் வருகைப்பதிவேடு முறை மேம்படுத்தப்படும்.

அனைத்துத் தேர்வகளும் அறிந்து கொள்ளும் பொருட்டு, பணித்தெரிவுகள் தொடர்பாக அனைத்து முக்கிய

விவரங்களும் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் http://trb.tn.nic.in வெளியிடப்படுகின்றன.

## 8.4 சாதனைகள்

2019-20 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியமானது பள்ளிக் கல்வித்துறைக்கு சிறப்பாசிரியர், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் கணினி பயிற்றுநர்- நிலை-1 ஆகியவற்றிற்கான பணித்தெரிவு முடிவுகளை வெளியிட்டுள்ளது.

## 8.5 நடத்தப்படவுள்ள பணித்தெரிவுகள்

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் பணித்தெரிவிற்கான அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான உதவிப் பேராசிரியர் பணித்தெரிவு மேற்கொள்ள தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அரசு தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர் நியமன பணித்தெரிவுத் தேர்வினை நடத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 8.6 தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்துவதற்கான முகவாண்மையான ஆசிரியர் தேர்வு வாரியம், 2012ஆம் ஆண்டு முதல் ஆறு முறை ஆசிரியர் தகுதித் தேர்வுகளை நடத்தியுள்ளது. 2021ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தகுதித் தேர்வினை 2021-22ஆம் கல்வியாண்டிற்குள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.7 நிதி ஒதுக்கிடு

2021-22-ஆம் நிதியாண்டில், ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.4.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 9.1. முன்னுரை

உயர்கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடுதல் மற்றும் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் "தமிழ் வெளியீட்டுக் கழகம்" 1961-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

தொடர்ந்து 1970-ஆம் ஆண்டு தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்யும் பணிகளுடன் இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற வழி பாடநூல்களையும் அச்சிட்டு விற்பனை மற்றும் விநியோகம் செய்வதையும் கருத்தில் கொண்டு 1993-ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் கழகம்" என பெயரிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்யும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதால், "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்பொழுது, இக்கழகம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 - இன் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி

பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்துவருகிறது.

### 9.2. நோக்கங்கள்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் 1 முதல் 7ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முப்பருவ பாடநூல்களையும் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முழு வருட பாடநூல்களையும் அச்சிடுதல்.

- உயர்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சூழலியல், சட்டம், கால்நடை அறிவியல், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம், உடற்கல்வி சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்.

- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் தென்னிந்திய மொழிகளில் வெளியிடுதல்.

- அரிய மற்றும் பழமை வாய்ந்த தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்.

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு புத்தகப்பை, காலேந்திகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது. சுமார் ரூ.233.52 கோடி மதிப்பிலான கல்வி உபகரணங்கள் 2020-21ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**9.3. உள்கட்டமைப்பு**

இக்கழகம் தனது சொந்தக் கட்டடத்தில் சென்னையில் உள்ள டி.பி.ஐ. வளாகத்தில் செயல்படுகிறது. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வட்டார அலுவலர்களின் தலைமையில் 22 கிடங்குகள் அமைந்துள்ளன.

**9.4.அச்சுப்பணி**

***9.4.1. பாடநூல்கள்***

இந்நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM தாள் (Elegant printing paper) மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட 230 GSM ஆரா ஃபோல்ட் ப்ளூ போர்டு கொண்ட (Aura Fold Blue Board) அட்டையில் பாடநூல்கள் அச்சடிக்கப்படுகின்றன. மாணவர்கள், சம்பந்தப்பட்ட பாடம் உள்ளடக்கிய காணொளி மற்றும் வினா வங்கி இணையதள விவரங்களைக் காண்பதற்கு வசதியாக விரைவு துலங்கல்

குறியீடு (QR Code) என்ற சிறப்பு அம்சத்துடன் செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் (Energized Textbooks) அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றன.

2020-21 இல் அச்சிடப்பட்ட பாடநூல்கள் விவரம் பின்வருமாறு :-

| பாடநூல்களின் விவரங்கள் | வருடம் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | தோராய மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு பாடநூல்கள் (இலவச பிரதிகள்) | 2020-21 | 503.95 | 291.87 |
| | 2021-22 | 306.66* | 147.17 |
| சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 2020-21 | 338.64 | 165.07 |
| | 2021-22 | 111.38* | 60.00 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான தமிழ் மொழிப் பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 2020-21 | 11.13 | 7.56 |
| | 2021-22 | 8.47 | 3.78 |

* ஒன்று முதல் ஏழாம் வகுப்பு வரை முதல் பருவ புத்தகங்கள் மட்டும் மற்றும் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டுப் புத்தகங்கள்

நடப்பு ஆண்டில், 2,52,77,272 பயிற்சிக்கட்டகப் புத்தகங்கள் (Work Book) மற்றும் 97,94,688 இணைப்பு பயிற்சிக்கட்டகப் புத்தகங்கள் (Bridge Course Material) அச்சடிக்கப்பட்டு, 120 மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

### *9.4.2 பிற நூல்கள்*

2020-21- இல், இக்கழகம் மூலம் கீழ்க்காணும் துறைகளுக்கு தோராயமாக ரூ.14.96 கோடி மதிப்பில் 72.62 இலட்சம் நூல்கள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
- சென்னைப் பல்கலைக்கழகம்
- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்ககம்
- பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்
- தொடக்கக் கல்வி இயக்ககம்
- தொல்லியல் துறை
- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- முன்னாள் படைவீரர் நலத்துறை

பார்வைத்திறன் குறைபாடுடைய மாணாக்கர்களுக்குப் பயன்படும் வகையில், தேவையின் அடிப்படையில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பிரெய்லி நூல்கள் கண்பார்வையற்றோர் தேசிய நிறுவனம் (NIVH) மூலம் அச்சடிக்கப்பட்டு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு வழங்கப்படுகின்றன.

**9.5. பாடநூல்கள் விநியோகம்**

இலவசப் பாடநூல்கள், வட்டார / மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மூலமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு நேரிடையாக வழங்கப்படுகிறது. மற்ற தனியார் பள்ளிகளை பொறுத்தமட்டில், இணையதளம் ஆணைகளின் மூலமாக வட்டார அலுவலகங்களிலிருந்து நேரடியாக புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பாடநூல்களை டி.பி.ஐ. வளாகம், அடையாறு கிடங்கு மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்வது மட்டுமின்றி, மாணவர்கள் அவர்கள் வீட்டிலிருந்தே புத்தகங்களை பெறும் பொருட்டு உள்நுழைவு முறையை பயன்படுத்தி இணையதளம் மூலம் புத்தகங்களை அடையாறு கிடங்கிலிருந்து பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இணையதள வசதி இல்லாத தனிநபர்கள் வருவாய்

வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மையத்தின் மூலம் இவ்வசதியைப் பெறுகிறார்கள்.

## 9.6. இலக்கியம் மற்றும் அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்தல்

சிறந்த தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய முன்னனி வெளியீட்டாளர்களான ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்பர் கோலின்ஸ், பென்குயின், விதாஸ்தா, நியோகி புக்ஸ் மற்றும் ரத்னா புக்ஸ் ஆகியோருடன் ஒருங்கிணைந்து சி.சு.செல்லப்பாவின் 'வாடிவாசல்', கி.ராஜநாராயணனின் 'கரிசல் கதைகள்', பேராசிரியர் பி.எஸ்.சுந்தரம் மொழிபெயர்த்த 'குறள்', திருமதி.ராஜம் கிருஷ்ணனின் 'சுழலில் மிதக்கும் தீபங்கள்', நீலபத்மநாபனின் 'தலைமுறைகள்' மற்றும் தி.ஜானகி ராமனின் 'செம்பருத்தி' ஆகிய 6 நூல்கள் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவரப்பட்டுள்ளன.

'கீழடி-வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம்' என்னும் தலைப்பிலான நூல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 2019-20-லும் பிற இந்திய மொழிகள் மற்றும் ஐ.நா. மொழிகள் உட்பட 22 மொழிகளில் ரூ.10.00 இலட்சம் செலவில் தொல்லியல் துறையோடு இணைந்து கூட்டு வெளியீடாக

2020-21-லும் கொண்டு வரப்பட்டது. இதுநாள் வரை ரூ.14.8 இலட்சம் மதிப்பிலான நூல்கள் விற்பனையாகியுள்ளன. புத்தகக் கண்காட்சியில் இந்நூல் விற்பனையில் சாதனை படைத்துள்ளது.

தமிழ் நாட்டில் காந்தி, மாபெரும் தமிழ் கனவு, கதா விலாசம், உ.வே.சா.வின் கட்டுரைகள், தோப்பில் முகமது மீரானின் சிறுகதைகள் உள்ளிட்ட 8 நூல்கள் மொழிபெயர்ப்பின் இரண்டாவது கட்டத்தில் வெளிக்கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதிப்பு மிக்க பன்னாட்டுப் பதிப்பகங்களால், ஏற்கெனவே மொழியாக்கம் செய்து பதிப்பிக்கப்பட்டு, தற்போது காணக்கிடைக்காத தமிழ் செவ்வியல் நூல்களும் பாடநூல் கழகத்தால் கொண்டுவரப்படுகின்றன. சங்க இலக்கியங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டு, 'Poems on Love and War' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் பேராசிரியர் ஏ.கே.இராமானுஜன் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் (Oxford University Press) பதிப்பகம் வெளியிட்ட சங்க இலக்கியக் கவிதைகள் நூல் கூட்டு வெளியீடாகக் கொண்டுவரப்பட உள்ளது. பேராசிரியர் ஆர்.பார்த்தசாரதி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு பென்குயின் ராண்டம் ஹவுஸ்

(Penguin Random House) பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட சிலப்பதிகாரம் நூல், இந்த வகைமையில் வெளிவர உள்ள மற்றொரு நூல் ஆகும்.

தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரும் பொருட்டு, தேசிய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் பங்குபெற அவர்களுக்குப் பயன்படும் வினா-வங்கிகள் பியர்சன் நிறுவனத்தோடு கூட்டு வெளியீடாகக் கொண்டுவரப்படவுள்ளன.

### 9.7 அரிய நூல்களை மின்மயமாக்கி மறுபதிப்பு செய்தல்

இக்கழகம் 875 அரிய நூல்களை தமிழ் இணைய கல்விக் கழகம் மூலம் மின்னாக்கம் செய்து, 635 அரிய நூல்களை மறுஅச்சு செய்து விற்பனை செய்து வருகிறது. இவற்றில் ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்கள் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு ரூ.12.62 இலட்சம் மதிப்புள்ள 8921 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த அரிய நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி நிறுவனம், அண்ணா மேலாண்மை நிலையம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக் கழகம் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

(RMRL) ஆகியனவற்றிற்கு மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் குறித்த விழிப்புணர்வை பொது வாசகர்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு, இவை ஆண்டுதோறும் சென்னை புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட அரிய நூல்களின் செம்பதிப்புகளையும் ISBN எண் பெற்று வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 10 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 20 நூல்களை வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வியியல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் அவர்களது கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கிலும் கல்வி உபகரணங்களை இந்தக் கழகம் கொள்முதல் செய்து மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

பாடநூல் கழகம் நூல்களை அச்சிட்டு வழங்கல் பணிக்காக மட்டும் தோற்றுவிக்கப்பட்டு, தற்பொழுது பன்மடங்கு உயர்ந்து இணையதளம் மூலம் நூல்களை விற்பனை செய்தல், அரிய மற்றும் பழமை வாய்ந்த நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுதல், அறிவியல் மற்றும் இலக்கிய நூல்களை ஆங்கிலத்திலிருந்து

தமிழாக்கம் செய்தல், அரிய நூல்களை மின்மயமாக்குதல், மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்தல் போன்ற இதர பணிகளையும் சிறந்த முறையில் செய்து வருகிறது.

# 10. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு **ரூ.32,599.54 கோடியாகும்**.

**2021-22 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்குத் தலைப்பு | | மாநில செலவினங்கள் | மத்திய அரசுத் திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| வருவாய்ப் பகுதி | | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 473.85 | | | 473.85 |
| 2059 | பொதுப் பணிகள் | | 10044.10 | | | 10044.10 |
| 2202 | பொதுக் கல்வி | | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1401024.02 | | 241798.46 | 1642822.48 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1478992.81 | | 80071.90 | 1559064.71 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 199.57 | | 750.00 | 949.57 |
| | 5 | மொழி வளர்ச்சி | 2221.00 | 0.01 | 2.51 | 2223.52 |
| | **மொத்தம் - பொதுக் கல்வி** | | **2882437.40** | **0.01** | **322622.87** | **3205060.28** |
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | | 177.15 | | 41.56 | 218.71 |
| 2205 | கலையும் பண்பாடும் | | 14005.21 | | | 14005.21 |

| | கணக்குத் தலைப்பு | மாநில செலவினங்கள் | மத்திய அரசுத் திட்டங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 14536.77 | | | 14536.77 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 266.00 | | | 266.00 |
| 2251 | தலைமைச் செயலகம் - சமூகப் பணிகள் | 1028.89 | | | 1028.89 |
| **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | | **2922969.37** | **0.01** | **322664.43** | **3245633.81** |
| மூலதனச் செலவுப் பகுதி | | | | | |
| 4202 | மூலதனச் செலவு | 14192.15 | | 78.71 | 14270.86 |
| **மொத்த மூலதன பகுதி** | | | | | |
| **கடன் பகுதி** | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் | 29.50 | | | 29.50 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | | | 0.00 |
| **மொத்த கடன் பகுதி** | | | | | |
| நிகர மொத்தம் | | **2937191.02** | **0.01** | **322743.14** | **3259934.17** |
| கூட்டுக – திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்) | | | | | **20.01** |
| **மானியக் கோரிக்கை எண். 43 இன் நிகர மொத்தம்** | | | | | **3259954.18** |

நமது மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கற்பித்தல்-கற்றல் செயல்முறைகளில் முழுமையான மற்றும் காலத்திற்கேற்ற கல்விச் சீர்திருத்தங்களைத் கொண்டு வருவதன் மூலம் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வியை வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு காசோலைகளை வழங்குதல்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.7.2021 அன்று பள்ளிக் கல்வித்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள், பணியிடைக் காலத்தில் இறந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் நூலகர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 1.7.2021 அன்று தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 19.6.2021 அன்று பள்ளி மாணவர்களுக்கு 2021-22ஆம் ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கையடக்க CPU கருவியை உருவாக்கியதற்காக திருவாரூர் மாவட்டம், பழவனக்குடி கிராமத்தைச் சேர்ந்த செல்வன். மாதவன் என்ற மாணவனை நேரில் அழைத்து பாராட்டுதல்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 19.6.2021 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்வி தொலைக்காட்சி வாயிலாக 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்துப் பாடங்களையும் தொடங்கி வைத்தார்கள்.




கல்வி தொலைக்காட்சி வாயிலாக மாணவர்கள் பாடங்களைக் கற்றல்.









முதுகலை ஆசிரியர்களுக்கு உயர் தொழில்நுட்ப ஆய்வகம் வழியாகப் பயிற்சி நடைபெறுதல்.




சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் எழில்மிகு தோற்றம்.